பக்கங்கள்: 10

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 8 வெள்ளிக்கிழமை (20-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 74

## போலந்துக்குள் நுழைய முயன்ற 98 இலங்கையர்கள் கைது!

### எல்லையை நெருங்கியபோது அபாயச் சங்கு ஒலித்தது

லண்டன், பெப் 20

போலந்து நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்த 98 இலங்கையர்களை உக்ரெயின் பொலீஸார் கைது செய்துள்ளனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலந்துக்கும் உக்ரெயினுக்கும் இடைப்பட்ட எல்லைக்கு அருகில் உள்ள காடு ஒன்றில் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

போலந்து நாட்டு எல்லையில் அமைந்திருக்கும் ஒவோகிவரவா என்னும் கிராமத்துக்கு அருகில் இந்த இலங்கையர்கள் குழுவாக சென்றபோது அபாயச் சங்கொலி முழங்கியது என்றும் அதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு சென்ற உக்ரெயின் பொலீஸார் முதலில் இருவரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தலவாக்கொல்லை; குண்டு வெடிப்புக்கள்

## எரிபொருள் தாங்கி மின்மாற்றி சேதம்

கொழும்பு, பெப்ரவரி 20

தலவாக் கொல்லை நகரப் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இரு குண்டுகள் வெடித்தன.

இக்குண்டு வெடிப்புக்களால் அதி சக்தி வாய்ந்த மின்மாற்றி ஒன்று மற்றும் எரிபொருள் சேகரிப்பு தாங்கி ஆகியன சேதமடைந்தன.

தலவாக்கொல்லை தமிழ் மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த அதிசக்திவாய்ந்த மின்மாற்றி முதலாவது குண்டில் தகர்க்கப்பட்டது.

இதன்காரணமாக தலவாக் கொல்லை நகரம், டெனிஸ்புர பகுதிகளுக்கான மின் விநி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் மரணதண்டனை

மட்டக்களப்பு, பெப். 20

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் உள்ள சித்தாண்டியில் விடுதலைப்புலிகள் 41 வயது பொதுதொழிலாளி ஒருவருக்கு மரண தண்டனை விதித்துள்ளனர்.

இம்மாதம் 10 ஆம் திகதி விடுதலைப்புலிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மாவடி வேம்பு வாசியான மதுரைவீரன் வேலாயுதம் (வயது 41) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவரது சடலம் நேற்று காலை மரமொன்றில் கட்டப்பட்டிருந்தது. இவர்படையினருக்கு தகவல் கொடுப்பவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

அரசமைப்பு சீர்திருத்தம்:

## இடைக்கால ஏற்பாடுகள் குறித்து 2 வாரங்களில் அறிவிக்கப்படும்

கொழும்பு, பெப். 20

இனப்பிரச்சினைத் தீர்வை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான இடைக்கால ஏற்பாடுகள் அடுத்த இரு வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பு திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்கும் எண்ணம் எதுவும் அரசாங்கத்துக்கு கிடையாது. அடுத்த பொதுத் தேர்தல் உரிய வேளையில் அதாவது 2000 ஆம் ஆண்டில் நடத்தப்படும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கை புலிகளிடம் ஒப்படைக்க விஜேதுங்க நோக்கமாக இருந்தார்

### அமைச்சர் அஷ்ரப் நேற்று சபையில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வடமாகாணத்தை ஒரு தனிநாடாக விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனிடம் கையளிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல்துறை அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் மேற்கண்டவாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாணய திருத்தச்சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரைநிகழ்த்திய அவர் டி.பி. விஜேதுங்க ஒருமுறை என்னுடன் தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருந்த போது இந்தக் கருத்தை வெளியிட்டார் என்று கூறினார்.

இந்த விடயத்தை ...

(10 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப சொந்த மண்ணிலும் சென்ற மண்ணிலும் நிலைமை ஒன்றுதான் எண்டு சொல்லுங்கோ...!

## கான்ஸ்டபிள் கைதானார்!

மட்டக்களப்பு, பெப். 20

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் சிங்களப் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். பொலீஸ் நிலைச் சுற்றாடலில் அண்மையில் இடம் பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டார்.

தமிழ் பெண் ஒருவரை திருமணம் புரிந்துள்ள இவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. (இ-21)

## கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து மோதல்

### 4 புலிகள் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, பெப். 20

கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இம்மோதலில் தமது தரப்பில் கனகரூபி (ஜெயரத்தினம் ராஜகீதம் — யாழ்ப்பாணம்), கதிரன்ரி (ராணி மகாலிங்கம் வவுனியா), கணேஷ் (திருஞானசம்பந்தமூர்த்தி சிவகுமார்— யாழ்ப்பாணம்), குலமகள் (முருகேசு சாந்தினி — மட்டக்களப்பு) ஆகியோர் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (இ-3)

## மாங்குளத்தைக் கைப்பற்றும் இறுதி நடவடிக்கையில் படை

கொழும்பு, பெப். 20

மாங்குளம் நகரைக் கைப்பற்றுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் நகரைச் சுற்றி படையினர் அரை வட்ட வடிவில் நிலைகள் எழுப்பி ஆயத்த நிலையில் நிற்கின்றனர் எனவும் அறியப்படுகின்றது.

மாங்குளத்தைக் கைப்பற்றும் இந்த இறுதிக்கட்ட நடவடிக்கை மிகுந்த விலை கொடுத்து வாங்க வேண்டியது ஒன்றாகும் என வன்னிப் பகுதிக் கட்டளைத் தளபதி நிமால் ஜெயசூரியா தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். (இ-7)

## பூசகர் உட்பட இருவர் புங்குடுதீவில் கைது

யாழ்ப்பாணம், பெப். 20

புங்குடுதீவைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நேற்று படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இரு இளைஞர்களையும் தம்மை வந்து சந்திக்குமாறு வேலணை இராணுவமுகாமிலுள்ள படையினர் அறி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்காக வந்த பஸ்கள் இங்கேயே சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். உள்ளூராட்சித்தேர்தல் பணிக்காக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட 100 பஸ்களையும் இங்கு சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்து அமைச்சர் எம். எச். பௌசி அனுமதி வழங்கியுள்ளார்.

தேர்தல்கடமைக்கு எடுத்து வரப்பட்ட பஸ்களை மீண்டும் கொழும்புக்கு எடுத்துச் செல்ல முயற்சி எடுக்கப்படு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 73 ஆயிரத்து 562 மாணவர் பல்கலை அனுமதிக்குத் தகுதி

கொழும்பு, பெப். 20

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 1 இலட்சத்து 42 ஆயிரத்து 327 மாணவர்களில் 73 ஆயிரத்து 562 பேர் பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களில் 250 மாணவர்கள் நான்கு பாடங்களி

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராசா பூலோகசுந்தரலிங்கம்

(சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)

சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசா பூலோகசுந்தரலிங்கம் 19-02-98 அன்று காலமானார்.

இவர் சந்திரலீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி, வரதராசா, உமையம்மா, சரஸ்வதி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோ. சிங்காரம், தம்பிச்சிப்பிள்ளை, தனபாலசிங்கம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20-2 98 வெள்ளிக்கிழமை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி பூ. சந்திரலீலா
(மனைவி)

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(53506)

## திருமதி தங்கம்மா சதாசிவம்பிள்ளை
(சிவசம்பு)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கைச்சேர்ந்த திருமதி தங்கம்மா சதாசிவம்பிள்ளை 18-02-98 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கதிரவேலு சதாசிவம்பிள்ளையின் (சிவசம்பு) அன்பு மனைவியும், நகுலாம்பிகை, ஸ்ரீகாந்தராஜா (கடற்றொழில் அமைச்சின் உதவிப்பணிப்பாளர்- வட மாகாணம்), டாக்டர் ஸ்ரீஸ்கந்ததேவன் (கனடா), ஸ்ரீஸ்கந்ததேவி, கலோசனாதேவி (சட்டத்தரணி மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசிங்கம் (தென்மராட்சி பிரதேச செயலக ஒய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீ காந்தராஜா (கொழும்பு திட்டமிடல் அமைச்சின் உதவிப்பணிப்பாளர்), திருமதி கோமளம் ஸ்ரீஸ்கந்ததேவன் (கனடா), சிவஞானம் (ஒய்வு பெற்ற மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர்), இந்திரகுமார் (பிரபல வர்த்தகர்- செங்கலடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், விபுவன் (லண்டன்), நகுலன் (கனடா), ஸ்ரீதாரணி (கொழும்பு), ஸ்ரீசாந்தி, ஸ்ரீவாணி, சேயோன் (கனடா), ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், சுதர்சினி, சுலர்னா, சுகண்யா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், காலஞ்சென்ற பரமசாமி, திருமதி அருணோதயம் மற்றும் கனகரத்தினம் (கனடா) இளைய தம்பி (ஒய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்), திருமதி அன்னபூரணம் பாலசிங்கம் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஒய்வுபெற்ற ஆசிரியை), திருமதி சிவபாக்கியம் பசுபதிப்பிள்ளை (ஒய்வு பெற்ற ஆசிரியை சுவிஸ்), துரைராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை 20-02-98 இன்று முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. ஸ்ரீகாந்தராஜா (மகன்)
ச. பாலசிங்கம் (மருமகன்)

ஆடியம்பிட்டி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
(53549)

## தம்பிப்பிள்ளை கனகராஜா

(ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, தர்மகர்த்தா, மானிப்பாய் வடகிழக்கு ஆனந்தன் வைரவர் ஆலயம்)

மானிப்பாயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கனகராஜா 19-2-98 இல் காலமானார்.

இவர் தம்பிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பொற்கொடி தம்பதிகளின் மருமகனும், மகாமதியின் அன்புக் கணவரும், நிரோஜா [மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி], தவபாலன் [மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி], முரளிதரன் [மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி], தர்சன் [மாணவன், சென், ஆன்ஸ் பாடசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரராசா, ஜெயராசா [டோகா], தவராசா, ஜெகநாதன், யோகேஸ்வரி [டென்மார்க்], இராஜேஸ்வரி [அவுஸ்திரேலியா], சிவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், திருமகளின் [ஆசிரியை, சுதுமலை சிந்மய பாடசாலை] அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சந்திரராஜ்

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.
[53512]

## புலி உறுப்பினர் மரணம்

வவுனியா, பெப். 20

கடந்த 15ஆம் திகதி கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் வீரவேங்கை சோளராஜன் (செல்வத்துரை யோகராஜா திருமலை) என்ற போராளி களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது. (ஐ-9)


**1St In Com. 98/99**
யாழ். பல்கலைக்கழகம்
புதிய பிரிவு
விரிவுரைகள்
ஆரம்பம்:
**21-02-98**
புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[49960]

எமது ஒறிஜினல்
வெளியீடு!
அர்ஜுன்–சிம்ரான்
நடித்த
★ கொண்டாட்டம்
வீடியோ
CD வெளியீடுகள்!
★ உளவுத்துறை
★ திருவருட் செல்வர்
★ சரஸ்வதி சபதம்
★ எஜமான்
★ நெஞ்சிருக்கும் வரை
★ இந்து
ஓடியோ
CD வெளியீடு!
★ வேலை
★ சிவப்பு நிலா
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2923)

**தேவை**
யாழ். நகரில் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு ஊழியர்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விளம்பர இல. 700
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
(சி/2918)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
20-02-98 (வெள்ளி முதல்)
சரத்குமார் - மீனா
நடித்த
நாட்டாமை
காட்சிகள்: 10-30. 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
35 ஆவது அகன்ற திரையில்
இன்று மட்டும்
எம். ஜி ஆர். நடித்த
உலகம் சுற்றும்
வாலிபன்
21-02-98 சனிக்கிழமை
முதல்
அர்ஜுன் - சிம்ரான்
நடித்த
கொண்டாட்டம்
(புத்தம் புதிய வெளியீடு)
10-30 2-30
(53059)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## செல்வி சுவித்தா இராஜலிங்கம்

யா/சன்மார்க்க மகா வித்தியாலய பழைய மாணவியும்
யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆண்டு 4 மாணவியும்

மலர்வு: 19 – 4 – 89 உதிர்வு: 21 – 1 – 98

கல்வியிலே கலை மகளாய்
செல்வத்திலே திருமகளாய்
இல்லம் சிறக்க வந்துதித்த - எம்
இளைய செல்வியே,
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

எமது செல்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் அளித்து உதவி புரிந்த அனைவருக்கும் மற்றும் மலரஞ்சலி செலுத்திய யா/ சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் யா/ திருக்குடும்பகன்னியர்மடம் ஆசிரியர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (20-2-98) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

குடும்பத்தினர்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/2921)

# கண்ணீர் அஞ்சலி

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின்
கணித ஆசிரியர்

## தம்பிப்பிள்ளை கனகராசா

அவர்கள் 19-02-1998 அன்று திடீர் மரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதலும், மனச் சாந்தியும் வேண்டுவதோடு எமது கண்ணீர் அஞ்சலியை அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்லூரி ஊழியர்கள்.
(53507)

# மரண அறிவித்தல்

## சின்னவி வைரமுத்து (நவாலி)

(நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துநர்)

நவாலி வடக்கைச் சேர்ந்த சின்னவி வைரமுத்து 19-02-98 இல் காலமானார்.

இவர் சின்னவி இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தனுஜாவின் பாசமிகு தந்தையும், கந்தசாமி, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இராசமலர், பவளம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-02-98) வெள்ளிக்கிழமை காலை 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரையம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. வேலாயுதம்
(மைத்துனர்)

நாச்சிமார் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(53511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றும் பாடசாலைகளின் உயர்தரப்பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம் பெப். 20

அண்மையில் வெளியிடப்பட்ட ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் மேலும் சில பாடசாலை மாணவர்கள் பெற்ற முக்கிய பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

அவற்றில் சில பாடசாலைகளின் சிறந்த பெறுபேறுகள் புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என இரு பிரிவாகவும், வேறு சில பாடசாலைகளின் பெறுபேறுகள் இரு பாடத் திட்டங்களையும் ஒன்றாகச் சேர்த்தும் கீழே பிரசுரமாகின்றன.

ஒரு பெறுபேற்றை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருப்பின் அவர்களின் எண்ணிக்கை விவரம் அந்தப் பெறுபேற்றின் அருகே அடைப்புக் குறிக்குள் உள்ளன.

**அத்தியார் இந்து**

★ வர்த்தகம்:- ப. பா — ஏ. 3சி, 2பிசிஎஸ்

★ கலை:- ப. பா — 3ஏசி, ஏ3பி, ஏ2பிசி, 2பி2சி, பி2சிஎஸ்
பு. பா — 2ஏ2பி, ஏபி2சி, 3பிசி, 2பி2சி, பி2சிஎஸ்.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

★ மருத்துவம்: ப. பா — பி3எஸ், 2பிஎஸ்

★ வர்த்தகம்:- ப. பா — 2ஏபிசி, 2பி2சி (2)

★ கலை:- ப. பா.— ஏ2பிசி, 2பி2சி (2), பி3சி (3)
பு. பா — 2ஏ2பி, ஏ2பிசி, ஏ3சி(2), 2பி2சி, பி3சி (2).

**வல்லை மகளிர்**

★ கலை:- ப. பா — 4சி, 3சிஎஸ்,
பு. பா —பி3சி, 3சிஎஸ்,

★ வர்த்தகம்:- பு. பா— 2பிசிஎஸ், பிசி2எஸ்

**உடுப்பிட்டி மகளிர்**

★ கணிதம்:- ப. பா— 4சி
பு. பா — 3ஏபி

★ மருத்துவம்:- பு. பா — ஏபி2சி

★ வர்த்தகம்:- ப. பா — 2பி2சி பு. பா — 3பிசி (2)

★ கலை:- ப. பா — 2பிசிஎஸ், பு. பா — ஏ2பிசி.

**உடுப்பிட்டி அமெரிக்கமிஷன்**

★ கணிதம்: ப. பா — 2ஏசிஎஸ், ஏபி2சி, ஏசி2எஸ், 3பிசி (4) 2பிசிஎஸ், பி3சி, 2பிசி
பு. பா—3ஏபி

★ மருத்துவம்:- பு. பா— 3ஏபி, 2ஏ2பி, 2ஏபிசி, ஏ3பி.

★ வர்த்தகம்:- ப. பா— 2ஏ2சி, 2பிசிஎஸ், பு. பா — 3பிஎஸ், 2பி2சி, 2பிசிஎஸ்.

★ கலை:- ப. பா — 2பி2சி, 2பி2எஸ், பி3சி(2), பிசி2எஸ், பு. பா — ஏ3பி, 2பி2சி, 2பிசிஎஸ், பிசி2எஸ்(2)

**வல்லை சிதம்பரா**

★ வர்த்தகம்:- பு. பா — 3பிஎஸ், 2பிசிஎஸ், 4சி.

**கரவெட்டி விக்கினேஸ்வரா**

★ கணிதம்:- ப. பா— 3பிசி, பு. பா—2பிசிஎஸ்.

★ மருத்துவம் ப. பா — 2பிசிஎஸ், பு. பா — 2பிசிஎஸ்(2)

★ வர்த்தகம்:- ப. பா — 2ஏபிசி, 2ஏசிஎஸ், பு. பா— 3பிசி.

★ கலை:- ப. பா— ஏ3பி, பு. பா—ஏ2பிசி.

**கரவெட்டி ஞானசாரியார்**

★ கலை:- பு. பா. — 2பிசிஎஸ் (2).

**வடமராட்சி மத்திய மகளிர்**

★ வர்த்தகம்:- ப. பா. — ஏ3பி, பு. பா. — ஏ3சி, ஏ2சிஎஸ்.

★ கலை:-ப.பா.—2ஏ2பி, ஏ3பி, ஏ2பிசி (2), ஏ2பிஎஸ், ஏ2சிஎஸ், பு.பா.— ஏ3பி(2).

**நெல்லியடி ம. ம. வி.**

★ கணிதம்:- ப. பா. — ஏ2பிசி, ஏபிசிஎஸ், பி3சி, பு. பா. — ஏபி2சி

★ மருத்துவம்:- பு.பா. — 2ஏ2பி.

★ வர்த்தகம்:- ப. பா. — 2ஏபிசி, பு. பா. — 2ஏபிசி, ஏ2பிசி, ஏ2பிஎஸ், 2பி2சி.

★ கலை:- ப. பா. — 2ஏபிசி(2), ஏ3பி(2), ஏ2பிசி, 3பிசி, பு. பா. — 2ஏ2பி, ஏபி2சி, ஏ2சிஎஸ், 3பிசி, 2பி2சி(2), 2பிசிஎஸ், பி3சி.

**பருத்தித்துறை வேலாயுதம் ம.வி.**

★ கணிதம்:- பு. பா.— பி3எஸ்.

★ வர்த்தகம்:- ப. பா. — 3ஏபி, ஏ3பி, ஏ2பிசி, ஏ2பிஎஸ், பு. பா.—3பிசி, 2பி2சி(2).

**பரு வட இந்து மகளிர்**

★ வர்த்தகம்:- ப. பா — 2ஏ பிசி, பு.பா —2பி2சி

★ கலை:- ப. பா. — 2ஏபிசி, பு.பா. — ஏபி2சி.

★ மருத்துவம்:- பு.பா— 2பி2சி.

**பரு. மெதடிஸ் மகளிர்**

★ கணிதம்:- ஏபி2சி, 2பி2சி, ஏ2சிஎஸ்.

★ மருத்துவம்:- 3ஏபி, ஏ3பி, ஏபிசிஎஸ், 3பிசி, 3பிஎஸ், 2பி2சி (3), பி3சி(2),

★ வர்த்தகம்:- ஏ3பி ஏ2பிசி (2), ஏபி2சி (3).

★ கலை:- 2ஏ2பி (2), 2ஏபிசி, 2ஏ2சி, ஏ2பிசி (2), ஏபி2சி

**மானிப்பாய் இந்து**

★ மருத்துவம்:- 2ஏபிசி, 3பிசி, பிசி2எஸ்.

★ வர்த்தகம்:- ஏ2பிசி, 3பிசி.

★ கலை:- 3பிஎஸ், 2பி2சி.

**இளவாலை புனித கென்றியரசர்**

★ கணிதம்:- 4ஏ.

★ மருத்துவம்:- 2பிசிஎஸ்.

★ வர்த்தகம்:- 2ஏபிசி, ஏ2பிசி.

★ கலை:- 2ஏ2சி.

**ஸ்கந்தவரோதயா**

★ மருத்துவம்:- 2ஏபிசி, பி2சிஎஸ், பி3சி, 3சிஎஸ்.

★ வர்த்தகம்:- 3ஏசி (2), ஏ2பி, ஏ3பி, ஏ2பிசி, 4பி, 3பிசி (2), 2பி2சி.

★ கலை:- 2ஏ2பி, 2ஏபிசி (3), ஏ3பி, ஏ2பிசி(6), ஏபி2சி (7), ஏ3சி, ஏபிசிஎஸ் (2), ஏ2சிஎஸ் (2), ஏ2சி.

**யாழ். இந்து**

★ கணிதம்:- 4ஏ (4), 3ஏபி (2) 2ஏ2பி (4), 2ஏபிசி, 2ஏ2சி, ஏ3பி (3) ஏ2பிசி (5), 4பி (2).

★ மருத்துவம்:-4ஏ, 3ஏபி, 2ஏ2பி(2), ஏ3பி, ஏ2பிசி(3), ஏபி2சி (2), 3பிசி (3).

★ வர்த்தகம்:- 4ஏ, 3ஏபி, 2ஏ2பி. 2ஏபிசி, ஏ2பிசி (2).

★ கலை:- 2ஏ2பி, 2ஏபிசி, ஏ2பிசி (2).

**வசாவிளான் மத்திய மகா வித்தி.**

★ கணிதம்:- 2பிசிஎஸ், 3சிஎஸ்.

★ மருத்துவம்:- 3ஏபி.

★ வர்த்தகம்:- ஏ2பிசி, 2ஏ2சி, 3பிசி.

★ கலை:- ஏபி2சி (2), ஏ3சி, 2பி2சி, பி2சிஎஸ் (2).

**ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்**

★ வர்த்தகம்:- 2ஏ2சி.

★ கலை:- ஏ3சி, 2பிசிஎஸ்.

**இராமநாதன் கல்லூரி**

ஏ3பி(2), ஏ2பிசி(2), ஏபி2சி. ஏபிசிஎஸ் (2), ஏ3சி, ஏசி2எஸ், 2பிசி(2), 2பி2சி (2), பி3சி (7), 2பிசிஎஸ்.

**சண்டிலிப்பாய் இந்து**

ஏ2பிஎஸ், 2பி2சி, பிசி2எஸ், 3பிசி, 4சி, 3சிஎஸ், 2சி2எஸ்.

**கொடிகாமம் திருநாவுக்கரசு**

2ஏ2பி. ஏ2பிசி, 4பி, 3பிசி,

**வைத்தீஸ்வரா கல்லூரி**

ஏ2பிசி, ஏபி2சி, ஏ3சி, 3பிசி, 2பி2சி (3), பி2சிஎஸ்.

**யாழ். சம்பத்திரிசியார்**

3ஏசி, ஏபிசிஎஸ் (3), 2ஏபிசி, ஏ3பி, ஏ2பிசி, ஏபி2சி (2), ஏ3சி, 3பிசி. 2ஏ2பி.

**உடுவில் மகளிர்**

3ஏசி, 2ஏ2பி, 2ஏபிசி (2), ஏ3பி (3), ஏ2பிசி(2), 4பி(2),

**மகாஜனாக் கல்லூரி**

3ஏபி (2), 2ஏ2பி (3), 2ஏ2சி (2), 2ஏபிசி (5), 2ஏசிஎஸ்.

**உரும்பிராய் இந்து**

2ஏ2சி, ஏ2பிசி (2), பி2சிஎஸ், 3சிஎஸ் (2), 2சி2எஸ், சி3எஸ் (3).

**யூனியன் கல்லூரி**

3ஏஎஸ், 2ஏ2பி. 2ஏபிசி(3) 2ஏபிஎஸ். 2ஏ2சி, ஏ3பி ஏபி2சி (9), ஏ2பிசி (2), ஏபிசிஎஸ் (2), 4பி, 3பிசி(3), 3பிஎஸ், 2பி2சி (4).

**வரணி மகாவித்தியாலயம்**

ஏ2பிசி (3), 3பிசி (3), 2பி2சி (2).

**யாழ்ப்பாணக் கல்லூரி**

★ கணிதம்:- ஏ3பி. ஏ2பிஎஸ், ஏபி2சி, 2பிசிஎஸ்.

★ மருத்துவம்:- 3ஏபி, ஏ3பி, 3பிசி.

★ வர்த்தகம்:- ஏ2பிசி, 4பி, 2பி2சி, ஏ2பிசி.

★ கலை:-பி3சி, ஏபிசி(3) 2பி2சி.

(ஐ-7-8-9-51-152-154-109 119- - 118- - 173)

## முத்திரை தட்டுப்பாடு

நெல்லியடி, பெப். 20

புலோலி, வதிரி ஆகிய இரு இடங்களிலுமுள்ள உப தபாலகங்களில் முத்திரைகளுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பாவனையாளர்கள் கூடியளவு பணத்தைக் கொடுத்து தனியார் கடைகளில் முத்திரைகளை பெறுகின்றார்கள். (ஐ-109)


**B. A (பேராதனை)**

ஏப்ரல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் 21 - 02 - 98 சனி 10 மணிக்கு கல்லூரிக்கு சமுகம் தரவும்.

S. அருள்நங்கை

**புதிய உயர்கல்லூரி**

ஆரியகுளம் சந்தி யாழ்.

(49961)



தரமான முறையில் குறைந்த கட்டணத்தில்

★ போட்டோ பிரதிகள்

★ லமினேட்டிங் (கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

**அருண்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## மனதார வாழ்த்துகின்றோம்

**யா சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

**க. பொ. த. (உயர்தரம்) 1997**

**பரீட்சைப் பெறுபேறு**

1 கணிதம்

| | | | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 1. | க. அகஸ்யன் | 2ஏ 2பி | 11 |
| 2. | இ. சிவலோகேஸ்வரன் | 3ஏ சி | 12 |
| 3. | சி. கோணேஸ்வரன் | 3ஏ பி | 17 |
| 4. | ம. சுகிந்தன் | 3ஏ பி | 21 |
| 5. | ந. சேயோன் | 2ஏ 2பி | 26 |
| 6. | தெ. சைலஜன் | ஏ 3பி | 38 |
| 7. | க. திசோக்குமார் | 2ஏ 2பி | 40 |
| 8. | சி. அஜந்தன் | ஏ பி 2சி | 44 |
| 9. | சி. ஆரணி | 2ஏ 2பி | 46 |
| 10. | தி. சுகந்தினி | 3பி சி | 70 |

2 விஞ்ஞானம்

| | | | |
|---|---|---|---|
| 1. | நா. சுரேஸ் | 3ஏ சி | 15 |
| 2. | சொ. கமலகுமார் | 2ஏ 2பி | 21 |
| 3. | பி. ரொனிசஞ்சீவ் | ஏ 3பி | 30 |
| 4. | இ. சுபாஜினி | 3பி சி | 51 |
| 5. | வெ. புஸ்பமாலினி | 4பி | 65 |
| 6. | வி. ஜெயச்சந்திரன் | 3பி சி | 76 |
| 7. | ப. ஜெசுரூபி | ஏ 2பி சி | 79 |

3. வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | இ. சிவமதி | 4ஏ | 02 |
| 2. | இ. துர்க்கா | 4ஏ | 05 |
| 3. | த. கிருபாகரன் | 3ஏ பி | 11 |
| 4. | இ. ஜனார்த்தனி | 3ஏ பி | 24 |
| 5. | செ. கலாவதனி | 3ஏ பி | 31 |
| 6. | வே. சுபாஜினி | 2ஏ 2பி | 49 |
| 7. | கு. அகல்யா | ஏ3பி | 68 |
| 8. | செ. செந்தீபன் | ஏ 3பி | 68 |
| 9. | சோ. மாலதி | ஏ 3பி | 105 |
| 10 | க. உத்தரை | ஏ 2பி சி | 138 |
| 11. | யோ. உமேஸ் | 3பி சி | 138 |
| 12. | வி. யசோதா | ஏ பி 2சி | 138 |

4 கலை

| | | | |
|---|---|---|---|
| 1. | ப. அபர்ணா | ஏ 3பி | 18 |
| 2. | செ. சுதர்சன் | 2ஏ 2பி | 41 |
| 3. | ப. சாலினி | ஏ 3பி | 52 |
| 4. | ந. எழில்வேள் | 2ஏ பி சி | 57 |
| 5. | கு. கனகேஸ்வரி | ஏ 2பி சி | 73 |
| 6. | க. பிரமாதேவி | ஏ 3பி | 80 |
| 7. | வி. தயாசிலன் | ஏ 3பி | 103 |
| 8. | இ. ஜெயந்தினி | 4பி | 103 |
| 9. | கி. நந்தினி | ஏ 2பி சி | 103 |
| 10. | சி. கவிதாநந்தினி | 4பி | 133 |

மேற்படி பரீட்சையில் சிறப்புச் சித்தியெய்திய இந்துவின் மைந்தர்களையும், பல்கலைக்கழக அனுமதிக்குதகுதி பெற்ற168 மாணவர்களையும், மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இவர்களை இந்நிலைக்கு வழிகாட்டிய மதிப்பிற்குரிய அதிபர், ஆசிரிய குழாமினரையும் மனம் திறந்து பாராட்டுகின்றோம்.

நன்றி

பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(53501)



**G.A.Q. 99 பேராதனை, யாழ்ப்பாணம் (பல்கலைக்கழகவெளிவாரி)**

★ A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்த (கலை, வர்த்தக, விஞ்ஞான) எத்துறை சார்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ மேற் கூறப்பட்ட பாட நெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

★ விரிவுரைகள் ஆரம்பம்: 21 — 02 — 1998

விபரங்களுக்கு:

அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

(49962) ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி

# உபஅதிபர் சேவைநலன் பாராட்டிதழ்

## வெல்லு பணியுவந்த வித்தகர் செ.சபாரத்தினம்

பல்லாண்டு வாழப் பணிபோற்றி வாழ்த்திசைத்தோம்!

## தலைமுறையின் வழிகாட்டி

ஏறக்குறைய 37 ஆண்டுகள் ஆசிரிய சேவையில் இருந்து இளம் தலைமுறையின ருக்கு வழிகாட்டி, கல்வி உயர்வைக் கொடுத்து வளமாக்கிய ஆசிரியப் பெருந்தகை செல்லையா சபாரத்தினம் அவர்கள் ஓய்வு பெற்று விட்டார். அன்னாரது சேவைநலம் பாராட்டு விழா எடுக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களினதும், ஆசிரியர், அதிபரினதும் முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது. இவர், ஆங்கிலப் பட்டதாரியாகத் தகுதி பெற்று சாவகச்சேரி இந்துவில் 04-07-80 தொடக்கம் கல்லூரியின் பல நிலைகளில் இருந்து கடமையாற்றியவர். சிறந்த பண்பாளரான இவர் மேலதிக உப அதிபர், உபஅதிபராகப் பதவி உயர்வு பெற்று பாடசாலைச் சமூகத்தின் உயர் மதிப்பைப் பெற்றவர்.

அன்னாரது ஓய்வு பாடசாலைக்கு மாத்திரமல்ல தென்மராட்சி கல்வியுலகத்துக்கும் ஒரு பேரிழப்பாகும். இருந்தும் அவரது ஆங்கில அறிவை மீண்டும் பயனாக்கிப் பாடசாலையில் கற்பிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஓய்வு காலம் சிறப்பாக இருக்க வேண்டுமென்று அவரது குடும்பத்தின் சார்பில் இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

சு: இரத்தினராசா
கல்விப் பணிப்பாளர்,
வலயம் - 1.

## போற்றுதற்குரிய புகழாளர்-

அமைதியின் வடிவம்; ஆற்றலின் உறைவிடம்; அடக்கத்தோடு, அகன்ற பணிசெய்யும் அயர்வறும் ஆசான். ஆங்கிலமொழி, ஆங்கில இலக்கியம் என்பற்றினூடாகத் தனக்கென ஒரு தனியிடத்தைப் பொறித்துக் கொண்ட நல்லாசிரியர். திரு. செ. சபாரத்தினம் அவர்களைப்பற்றி இவ்வாறு தொடர்ந்து சொல்லிக் கொண்டே போகலாம். உதவி ஆசிரியராக இருந்து இந்துக் கல்லூரியின் முத்துபுகழ் உப அதிபராக உயர்ந்து, அவராற்றிய பணிகள் அளப்பரியன. மாணவர் ஒழுக்கம், ஆசிரியர்சேவை, அதிபர் தகைமை என்பவற்றுக்கெல்லாம் உதாரண புருஷராக விளங்கியவர். திரு. செ. சபாரத்தினம் அவர்கள். இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பொன்னேட்டிலும், தென்மராட்சிக் கல்விக்கோட்டச் சரித்திரப் பதிவிலும் திரு. செ. சபாரத்தினம் அவர்களின் புகழ் நிச்சயமாகப் பொறிக்கப் பெற்றிருக்கும்.

இ. கணேசன்
(கல்விக்கோட்ட அலுவலர்,
தென்மராட்சி)

## என்றைக்குந் துதிப்போம் - எழிலுறுக!

கல்வியெம் தாயவள் காவிய நாயகி
காசினி வென்றவள் இந்துமகள் — அவள்
நன்றிங்கு வாழ்ந்திட நாடியுழைத்த உம்
நற்பணி நாம்கண்டு வாழ்த்திசைத்தோம்!
தன்னிக ரற்றவர் தங்கம்ச பாரட்ண
தாவுபு கழ்பெறு உபஅதிபர் — அவர்
என்றைக்கு மெம்மன மேத்திடு பண்பினர்
எழிலுறுக; வாழ்வு பொலிவுறுக!

வெற்றிய ருக்கொரு விரும்புமு கேஸ்வரன்
விட நிதிட நின்று உழைத்ததுபோல்-வெல்லு
பெற்றியர் சந்திர சேகரத் தாருக்கு
விரும்பு "சபா" மன்றில் நீவிருந்தீர்
அற்புதங் கண்டிட அன்னை உயர்ந்திட
அரும்பணி ஆவலொ டாற்றிநின்றீர் - பணி
முற்றிட வில்லையுஞ் சேவையின் னுந்தேவை
மொழிந்தோம் வாழ்த்துகள்—முன்வருக!

த. நாகேஸ்வரன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச்சபை.



## திரு. சபாரத்தினம் அவர்களின் சேவைச் சுவடுகள்...

முதல் நியமனம் 01-10-1966

01-10-66 — 06-01-67 — யா/ நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்
07-01-67 — 31-12-68 — பலாலி ஆசிரிய பயிற்சிக் (ஆங்கிலம்) கலாசாலை
01-01-69 — 31-01-72 — அ/ விவேகானந்தா த. ம. வி அனுராதபுரம்
14-01-72 — 30-04-72 — யா/ கச்சாய் அ. த. க. பா.
01-05-72 — 18-09-74 — யா/ மீசாலை விக்கினேஸ்வரா ம. வி.
19-09-74 — 16-02-76 — யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.
17-02-76 — 03 07-80 — யா/ மந்துவில் றோ. க. த. க. பா.
04-07-80 — 28-03-94 — உதவி ஆசிரியர் சாவ./ இந்து
29-03-94 — 29-03-96 — மேலதிக துணை அதிபர்
30-03-96 — 23-09-97 — துணை அதிபர்

## நுண்மதியாளப் பெருந்தகை

எமது துணை அதிபர் திரு. செ. சபாரத்தினம் அவர்களின் இளைப்பாறுகை கல்லூரிக்குப் பெரும் வள இழப்பாகும். கல்லூரியின் ஒவ்வொரு துறையிலும் தமது பங்கையும் பணியையும் சுவறச் செய்த பெருமைக்குரியவர். கல்லூரியின்பற்றுமிக்க பழைய மாணவன், ஆங்கிலக் கல்வியின் விருத்திக்கு உந்து சக்தியாக விளங்கி சக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆக்கமும், ஊக்கமும் நல்கிய நல்லாசான். கல்லூரியின் நீண்ட காலத் தொடர்பாளராக விளங்கியமையால் கல்லூரிச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தள நிலையிலிருந்து சிந்தித்துச் செயலாற்றும் அனுபவ முதிர்ச்சி நிறைந்தவர். சமூகப் பயன்பாடுமிக்க பண்புகள் யாவும் ஒருங்கிணையப் பெற்ற சமநிலை ஆளுமை கொண்ட நிறைமனிதர்.

எனது எதிர்பாராத புலப் பெயர்வின்போது கல்லூரியின் வெற்றிடத்தை நிரப்பச் செய்யும் வகையில் நுண்மதியுடன் செயலாற்றிய பெருந்தகையாளன். துணை அதிபர் அவர்களின் இப்பணி என்றும் என் நினைவில் நிலைத்திருக்கும் என்றும் எனக்கு உற்றதுணைவராய் கடமை ஆற்றிய துணை அதிபர் அவர்களது எதிர்காலம் அமைதியும், ஆனந்தமும், ஆரோக்கியமும் நிறைந்ததாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

க. சந்திரசேகரா
[அதிபர்]

## மகத்தான சேவையாளர்

எமது பாடசாலையின் ஆரம்ப கால மாணவர்களுள் ஒருவராக இருந்து பின்னர் இப்பாடசாலையின் ஆசிரியராகவும், உப அதிபராகவும் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெறும் வேளையில் நாமும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

இப்பாடசாலையை ஒரு விருட்சத்துக்கு ஒப்பிட்டு அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து தென்மராட்சி மக்களின் கண்ணாக இன்று வரை காத்து வைத்திருந்த பெருமையில் இவருக்கும் கணிசமான பங்கு உண்டு.

தமிழ் மொழியில் ஆழ்ந்த அறிவும் அக்கறையும் கொண்ட இவர் ஆங்கிலப் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், பட்டதாரி ஆசிரியராகவும் மாணவர்களுக்கு ஆற்றிய, ஆற்றி வரும் சேவை மகத்தானது.

ஓ. விஜயரத்தினம்
ஆசிரிய சகோதரத்துவம் (செயலாளர்)

## ஆளுமை மிக்க அறிவாளர்

சைவமும் தமிழும் தழைத்தோங்கித் தரணியெல்லாம் புகழ் கமழ வேண்டும் என்ற மன உந்துதலால், உயர்தகை திரு. தாமோதரம்பிள்ளை அவர்களினால் உருவாக்கப்பட்டது சாவகச்சேரி இந்துக்கல்லூரி. நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து, இன்று தேசிய நிலையுற்று இந்து அன்னை பொலிகின்றாள். இந்த வளர்ச்சிப் பாதையில் தூண்களாகத் தாங்கி நின்று தாயைத் தூக்கிநிறுத்திய பேராளர்கள் பலபேர். அந்த வரிசையில் உப அதிபர், உயர்திரு. செ. சபாரத்தினம் அவர்களின் பணிகளும், புனித சேவைகளும் நினைத்து நிற்கக் கூடியவை.

கடமை உணர்வு, கண்டிப்பு, சேவை உணர்வு, ஆளுமைமிக்க நிர்வாகம், அர்ப்பணிப்பு, பகுதிக் கடமைகளுக்கு மத்தியிலும் வகுப்பறைக் கற்பித்தலுக்கு முன்னின்ற பாங்கு இவையெல்லாம் திரு செ. சபாரத்தினம் அவர்களிடம் இயல்பாயமைந்த இனிய தன்மைகள். அதிபரோடு கைகோர்த்து நின்று, கல்லூரித் தாயின் கடமைகளைச் சோர்வின்றிச் செய்த திரு செ. சபாரத்தினம் அவர்கள் நலஞ்கொஞ்ச, நன்றுவாழ, கல்லூரிப் பழைய மாணவர்கள் சார்பிலே எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

டாக்டர் சு சி. அருளானந்தம்
பழைய மாணவர் சங்கம். செயலாளர்,

## இதயம் வென்றவர்

இந்துக்கல்லூரி என்னும் எமது அன்னைக்கு உரமிட்டு வளர்த்தவர்கள் பலர். அவர்களுள் இன்று நம்மிடமிருந்து ஒய்வுபெற்றுச் செல்லும் எமது அன்புக்குரிய துணை அதிபர் திரு. செ. சபாரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார்.

எமது துணை அதிபர் மென்மையான ஆனால் கண்டிப்பு மிக்க ஒருவர். மாணவர்களாகிய எமது பிரச்சினைகளை சுமுகமாக அணுகி தீர்த்து வைப்பதில் வல்லவர். சுருங்கக் கூறின் மாணவர்களது இதயங்களை வென்ற ஒரு மனிதர்.

இந்தப் பாராட்டுக்கள் எல்லாம் அவரது பணிக்கு நன்றி பாராட்டும் ஒரு நாகரிக வடிவங்களே தவிர அவரது பணிக்கு நம்மால் திருப்பிக் கொடுக்கக் கூடிய பிரதியுபகாரம் அல்ல.

தொடர்ந்தும் அவரது ஆலோசனைகளும் ஆதரவும் எமது கல்லூரிக்குக் கிடைக்கும் என நாம் நம்புகிறோம். அவரது எதிர்கால வாழ்வு சிறப்புற அமைந்திட அனைத்தும் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

ந. அருள்வேள்
முதன்மை மாணாக்கர் தலைவன்,
யா / சாவ. இந்துக் கல்லூரி.

இன்று 20 - 02 - 1998 காலை 9 மணிக்கு கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இடம்பெறும் உபஅதிபரின் சேவைநலன் பாராட்டு நிகழ்விற் கலந்து சிறப்பிக்குமாறு கல்லூரி ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம்.

இதழ் மலர உதவியோர்:

| | | | |
|---|---|---|---|
| ஐங்கரன் வெதுப்பகம்<br>டச் வீதி, சாவகச்சேரி. | அம்மன் நகைமாடம்<br>கண்டி வீதி, சாவகச்சேரி. | புத்தமுதம் வெதுப்பகம்<br>அரசடி. சாவகச்சேரி. | விக்கினேஸ்வரா களஞ்சியம்<br>கண்டி வீதி, சாவகச்சேரி. |
| ஆசீர்வாதம் புத்தகசாலை<br>தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. | கீதா நகைமாடம்<br>12, நவீன சந்தை, சாவகச்சேரி. | இந்திரன் நகைமாடம்<br>10, நவீன சந்தை, சாவகச்சேரி. | விமலாஸ்<br>நவீன சந்தை முன்புறம், சாவகச்சேரி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## பெரும் திருப்பணி விஞ்ஞாபனம்

கற்பகக் கன்னறக் கடம்பனைத் தந்த கனகவரை
அற்புதயோன் வருணாகந் தாங்கு மமிர்தவல்லி
தற்பரன் வாமந் தழைத்தே சகல வுயிர்களுக்கும்
நற்பதியே யெனப்பெற்ற சதானந்த நாகம்மையே!
— நயினைச் சுவாமிகள்

ஆலய விமானங்கள், இராஜ கோபுரங்கள் புதுப்பித்தல், உள் வீதிச் சுற்றுப்புறத்தளத்திற்கும் சுவருக்கும் பளிங்குக்கல் பதித்தல், தென் கோபுர வாயில் மண்டபம் அமைத்தல், விநாயகப் பெருமான். சுப்பிரமணியப் பெருமானுக்குப் புதிய திருத்தேரும். அம்பிகைக்கு மஞ்சமும் அமைத்தல் முதலாய

## பெரும் திருப்பணி விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள சப்ததீவுகளில் வரலாற்றுச் சிறப்புமிக்கது நயினாதீவாகும். அருட்பொலிவும் ஆன்மீகப் பொலிவும் மிக்க இத் தெய்வீகப் பதியில் அம்பிகை அறுபத்துநான்கு சக்திபீடங்களில் ஒன்றாகிய புவனேஸ்வரி பீடத்தை தன்னகத்தே கொண்டு சுயம்பு மூர்த்தியாகவும், குண்டலினி சக்தியாகவும் விளங்கி அகிலமெங்கும் அருளொளி வீசிப் பிரகாசிப்பது எல்லாத் தேசத்து மக்களும் அறிந்த உண்மையாகும். தன்னை நாடிநிற்கும் அன்பர்க்கு வேண்டிய வேண்டியாங்கு விரும்பும் வரமளித்துக் காப்பவளாகிய அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் ஆலயத்தில் தாபிகன், கோபுரங்களில் சிதைவுற்றிருக்கும் சிற்பங்களைப் புனரமைத்து வர்ணம் தீட்டுதல் ஆலய மேற்கூரை முழுமையாகப் புனரமைக்கப்பட்டு உட்பிரகாரம் முழுவதும் சீற் அடித்தல் உள்வீதி சுற்றுப்புறத் தளத்திற்கும் உட்சுவர்களுக்கும் மாபிள்கள் பதித்தல், தென்கோபுர வாசலில் முகப்பு மண்டபம் அமைத்தல் விநாயகப் பெருமானுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கும் புதிய திருத்தேர்கள் அமைத்தல், அம்பிகைக்கு மஞ்சம் அமைத்தல். அடியார்கள் நீராடுவதற்காக திருக்கேணி அமைத்தல். ஆலய வெளி வீதிகளில் நீர் வழங்குதலை ஏற்படுத்துதல், ஆலயத்தின் உள் - வெளிப் புறங்களில் மின்னிணைப்புகளை முழுமையாகப் புனரமைத்தல். புதிய தேர்கள், மஞ்சம் முதலியவற்றிற்கு தனித்தனி தரிப்பு மண்டபங்கள் நிர்மாணித்தல் போன்ற பல திருப்பணிகளைச் செய்வதற்கு அறங்காவலர் சபை தீர்மானித்துள்ளது.

இத் திருப்பணிகளை அம்பிகையின் திருவருள் துணையுடனும், அடியார்களின் பேராதரவுடனும் நிறைவு செய்யும் நோக்குடன் கடந்த 07 - 09 - 97 ஆம் திகதியன்று ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் பங்குனி மாதம் 18 ஆம் நாள் (01 - 04 - 1998) திகதியன்று இத் திருப்பணிகளைப் பூர்த்தி செய்து மகாகும்பாபிஷேகத்தை நடாத்தவும் திருவருள் துணையுடன் தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் ஆனி மாதம் நடைபெறவுள்ள வருடாந்த மகோற்சவத்திற்கு அம்பிகையுடன் விநாயகப்பெருமானும் சுப்பிரமணியப் பெருமானும் புதிய தேரில் வீதியுலா வரவேண்டுமென்ற நோக்கில் தேர்த்திருப்பணி வேலைகளும் ஆரம்பித்து நடைபெற்றுவருகின்றன. இத்திருப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குப் பல இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. அன்னையின் இத் திருப்பணிகள் இனிதே நிறைவேற அம்பிகை அடியார்களின் பேருதவியும் பேராதரவும் பெறுமதிமிக்க பங்களிப்பும் எமக்குக் கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையுண்டு. எம்பிராட்டியின் தெய்வீகத் திருவருள் தோன்றாத் துணையாக எல்லோர் மனதிலும் உந்துசக்தியாக நின்று ஊக்குவிக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

இத்திருப்பணிக்கு நிதியுதவி செய்ய விரும்பும் அடியார்கள் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள இலங்கை வர்த்தக வங்கியின் ஆலயக் கணக்குகள் ஊடாகவும் "பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு" என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவும் ஆலய அறங்காவலர் சபைக்காரியாலயத்தில் நேரடியாகவும் தங்கள் மனப்பூர்வமான பங்களிப்பினைச் செலுத்தலாம்.

திருப்பணி நிதி சேகரிப்பதற்காக நாம் எவரையும் நியமிக்கவில்லை. அனுமதிக்கவுமில்லை. எக்காரணம் கொண்டும் எவரிடமும் திருப்பணி நிதியினைக் கையளிக்க வேண்டாம் எனவும், யாராவது இவ்வாலயத்தின் பெயரால் திருப்பணி நிதி சேகரிப்பதாக அறிந்தால் அதுபற்றி எமது கவனத்திற்கு தாமதமின்றி தெரியப்படுத்தி தார்மீக ஒத்துழைப்பை நல்குமாறும் தயவாக வேண்டுகின்றோம்.

திருப்பணி நிதித் தொடர்புகளுக்காக எமது வங்கியின் பெயரும், முகவரியும், நடைமுறைக் கணக்கின் இலக்கமும் தரப்பட்டுள்ளது. வங்கியுடன் தொடர்பு கொண்டால் எமக்குத் தெரியப்படுத்துமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

அம்பிகையின் திருப்பணிகள் இனிதே நிறைவெய்தி, மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு அன்னையின் அருளாசிகளும் அன்பர்களின் பேராதரவும் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எம்பிராட்டியின் திருவருளை இறைஞ்சி, எல்லோருக்கும் நல்லன வெல்லாம் கிடைக்க அம்பிகை அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

A/C No. 01-2426285- 01
COMMERCIAL BANK
of CEYLON Ltd,
180/■1/31 PEOPLES PARK
SHOPPING COMPLEX,
SRI BODHIRAJA MAWATTE
COLOMBO - 11.

A/C No. 12330
COMMERCIAL BANK
of CEYLON Ltd.
474, HOSPITAL ROAD,
JAFFNA.

அம்பிகையின் அருளாசிகள் அனைவருக்கும்
இனிதே கிடைப்பதாகுக.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

20-2-98

(58485)

# தீர்வுத் திட்டம், மாற்று யோசனை யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரா!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20

"அரசாங்கத்தின் அரசமைப்பு சீர்திருத்தமோ அல்லது ஐ. தே. கட்சியின் மாற்று யோசனைகளோ இன்றைய யுத்தத்துக்கு முடிவைப்பெற்றுத் தரப்போவதில்லை.

மேற்கண்டவாறு எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஐ.தே.க. நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய யுத்தத்தை அரசு எந்த வழியில் முடிவுக்குக் கொண்டு வரப்போகிறது என்பதை அரசு தெளிவாகக் கூறவேண்டும்.

இன்றைய அரசின் நடவடிக்கைகள் திருப்திகரமானவையாக இல்லை. ஆனால் அரசு அதற்காக ஐ. தே. க. மீது பழிபோடமுனைகின்றது.

அரசியல் லாபம் கருதி யுத்தம் தொடர்வதை ஐ.தே.க. அனுமதிக்கப்போவதில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ)

# கடும் நோயாளிகள் வேடத்தில் வானில் தற்கொலையாளிகளாம்

### கொழும்பு செல்வதாகப் பொலீஸ் தகவல்

கொழும்பு, பெப். 20

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் படைப்போராளிகள் இருவர் அல்லது மூவர் கடும் நோயாளிகள் போன்ற வேடத்தில் வெள்ளை நிற வான் ஒன்றில் பதுளையில் இருந்து புறப்பட்டுள்ளனர் எனப் பொலீசாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

52—7763 இலக்கத்தையுடைய இந்த வான் கடந்த ஞாயிறு அதிகாலை பதுளையில் இருந்து புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வானைக் கண்டதும் வழிமறிக்குமாறு அனைத்துப் பொலீஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வான் கொழும்பு நகரை நோக்கியே பெரும்பாலும் வரக்கூடும் எனவும் கொக்கட்டிச் சோலையில் இருந்தே அந்த வான் பயணத்தை ஆரம்பித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமைச் சேர்ந்த மூன்று தற்கொலைப்படைப் போராளிகள் வெடிப் பொருள்கள் நிரப்பப்பட்ட அந்த வானில் பயணம் செய்வதாக நம்பப்படுகிறது.

இந்தத் தகவலை அடுத்து மலைநாட்டில் உள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனத்தை புலிகள் சிலசமயம் "அம்புலன்ஸ்" வாகனம் போல் உருமாற்றிக் கொண்டுவரலாம் என நம்பப்படுகிறது.

இவ்வாறு 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-10)

### தம்பலகமம் படுகொலைகள்:

# 41 பேர் சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டனர்

மட்டக்களப்பு, பெப். 20

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் தமிழ் கிராமவாசிகள் படுகொலைச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பில் பொலீஸ் காவல் நிலைய பொறுப்பதிகாரி உட்பட 41 பேர் சாட்சிகளால் இதுவரை அடையாளம் காணப்பட்டனர்.

பதில் நீதிபதி சுபாஷினி வரதன் முன்னிலையில் கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை அடையாள அணி வகுப்புகள் நடைபெற்றன.

பொலீஸ் அதிகாரிகள் மூவர் சார்ஜன்ட்டுகள் இருவர், பொலீஸ்கான்ஸ்டபிள்கள் 14 பேர், ஊர்காவல்படையினர் 21 பேர், பொதுமகன் (தகவல் கொடுப்பவர்) ஒருவர் ஆகியோர் அடையாளம் காணப்பட்டவர்களில் அடங்குவர்.

அடையாளம் காணப்பட்டோரை இம் மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

8 கிராமவாசிகள் தம்பலகமத்தில் படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

(இ-21)

# வவுனியாவில் சுற்றிவளைப்பு 41 பேர் தடுத்து வைப்பு

வவுனியா, பெப்: 20

வவுனியா பண்டாரிக்குளம், குருமண்காடு, வேப்பங்குளம், நெலுக்குளம் பகுதிகளை கடந்த செவ்வாயன்று சுற்றிவளைத்த படையினர் 41 பேரை கைது செய்து பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்களில் எட்டுப் பேர் மதகுருவைத்த குளத்தில் உள்ள பண்ணை ஒன்றில் வேலை செய்பவர்கள் என்றும் மற்றும் பலர் பாடசாலை மாணவர்கள் என்றும் தெரிய வந்தது.

கைதானவர்களின் உறவினர்கள் வவுனியா செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் சிவநாதன் கிஷோரிடம் முறையிட்டனர்.

இது தொடர்பாக பொலீஸ் பொறுப்பதிகாரியுடன் அவர் தொடர்பு கொண்டார்.

கைதானவர்களில் வழிவிட பாஸ் காலாவதியானவர்களுக்கு அதற்குரிய தண்டனை வழங்கப்படும் என்றும்—

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

ஏனையோர் விடுதலை செய்யப்படுவர் என்றும் — பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(இ-164-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

4000 ஓடுகள், 150 முகட்டோடுகள், தீராந்தி 600 அடி 4X4, 4X3, 5X4 (பாலை. முதிரை) நிலை ஐந்து சிறகு கதவுடன், நிலைகள் கதவுடன் - 2, யன்னல்கள் கதவுடன் - 16, பலன்ஸ்போட் 300 அடி, நீப்பை 2X2, பனை மரம் 2000 முழம், சிலாகை 2000 முழம், சேற் -1, சீற் 4X4 விற்பனைக்கு உண்டு தொடர்பு: வே. எதிர்மனசிங்கம், 49,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

[53483]

### தவறிவிட்டது

இல. 20, அச்சக ஒழுங்கை கொக்குவில் இழக்கைச் சேர்ந்த இராசநாயகம் செல்வேந்திரன் என்பவருடைய 673021760V தேசிய அடையாள அட்டை, 0902018427 விசேட அடையாள அட்டை கொக்குவில் தலையாழிக்கும், நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்; நன்றி.

[53482]

## திருமுறை படிப்பு பூர்த்தி

கொழும்புத்துறை, பெப். 20

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயிலில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த பன்னிரு திருமுறைப் படிப்பு பூர்த்தி விழா ஆலயப்பிரதம குரு சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

பூர்த்தி தினத்தன்று ஏட்டுச் சுவடிகள் ஊர்வலமாக சுழிபுரம் மேற்கு அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுதர் சுவாமி ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பூசை, வழிபாடுகள், பிரார்த்தனைகள் இடம் பெற்றன. (ஐ-30)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நல்லூர், பெப். 20

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தியில் உள்ள கால்நடை வைத்திய நிலையத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 30 மணிக்கு கோழிக் குஞ்சு விநியோகம் இடம் பெறும். (இ-103)

## சங்கங்களில் கிருமி நாசனி

கொழும்புத்துறை, பெப். 20

பண்டத்தரிப்பு பரிஸ்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது விவசாயத்துக்கான கிருமிநாசனியை சங்கத்தின் கிளைகள் மூலம் விற்று வருவதாக சங்கத்தின் தலைவர் ச. செல்வரத்தினம் தெரிவித்தார்.

(ஐ-30)

## வண்டில் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 20

வண்டில் சில்லு ஏறியதால் ஒருவர் படுகாயமடைந்தார்.

வடவரணியில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிதம்பரநாதன் சுப்பிரமணியம் (வயது 72) என்பவரே படுகாயமடைந்தார்.

நெற்போரை வண்டியில் ஏற்றிக் கொண்டு புறப்பட முயன்ற வேளையே மாடு திமிறி இழுக்க முற்பட்ட வேளை இவர் இடறி விழுந்து சில்லுக்குள் அகப்பட்டு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஐ-15)

## 11-ம் ஆண்டு நினைவுச்சுடர்



### கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

மலர்வு: 30 - 12 - 1963

உதிர்வு: 22 - 02 - 1987

திதி: 20 – 02 – 1998

அன்புக்கு இலக்கணம் வகுத்த
அன்புச் செல்வமே!
அரவணைக்க தாய் உண்டு
கல்வி கற்பிக்க தந்தை உண்டு,
அன்பு காட்ட நீரில்லையே!

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அப்பா, சகோதரர்கள்.

23, காரைக்காட்டுலேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (53478)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் பொன்னம்பலம் உமாகாந்தன்

தோற்றம்: 13 - 07 - 1956

மறைவு: 21 - 01 - 1998

1998 – 01 – 21 ஆம் திகதியன்று இறைபாதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து மலர் வளையம் சார்த்தி கண்ணீர் அஞ்சலி செலுத்திய யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யாழ்/ பரி.யோவான் கல்லூரி, யா/ புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம், யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், மாணவிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

20 - 02 - 98 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
திருமதி இ. உமாகாந்தன்
குடும்பத்தினர்.

40/4, கோவிலடி,
சுண்டுக்குளி. (53371)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 9-00மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். கணக்காய்வு அத்தியட்சகருமான ஆறுகம் சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ஆர். இராஜேந்திரமும் கலந்து கொள்வர். (ஐ-118)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திகையும்



மலர்வு: 16 - 02 - 1932

உதிர்வு: 23 - 11 – 1997

### அமரர் ந. மாணிக்கம்

இன்று நடைபெறும் எமது அன்பிற்குரிய தந்தையின் 90 ஆம் நாள் நினைவஞ்சலியிலும், வீட்டுக்கிருத்திகை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புக்குரிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினர்.

தகவல்:
மகன்:- மா. பரமானந்தன்,
(முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை)
அண்ணாசியையடி, கரணவாய்,
கரவெட்டி. (53450)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### சதாசிவம் செல்லையா

மலர்வு: 17–10–1917

உதிர்வு: 21–01–1998

தெல்லிப்பழை மாத்தனை, துர்க்கா புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அவரது சகோதரன் சிங்கப்பூர் கந்தையாவின் இல்லத்தில் வசித்து இறைவனடி எய்தியவருமான சதாசிவம் செல்லையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (20-02-98) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பூசையிலும், அதைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவியும், பிள்ளைகளும்,
மருமக்களும்.

இல: 35, செட்டித்தெரு,
நல்லூர். (53491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசம்.

# உதயன்

## யுத்த சபையா?

வடக்கு – கிழக்கில் நடைபெறும் போரைத் தீவிரப்படுத்தவும் போர் தொடர்பான முடிவுகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் வசதியாக யுத்த சபை நிறுவ வேண்டும் என்ற கருத்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தை அரசாங்கத்திடம் கோரிக்கையாகச் சமர்ப்பிக்க நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையையே கொண்டு வருவதற்கு தீவிரவாதப் போக்குடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் என்பது செய்தி.

யுத்த சபை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற கருத்துப் புதியதல்ல. போர்க்களத்தில் பின்னடைவுகள் ஏற்படும் போதெல்லாம், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கக் கூடாது. வடக்கு—கிழக்கைப் பிரிக்க வேண்டும். ஒற்றையாட்சி முறையை நீக்கக் கூடாது என்ற கருத்துடைய பல தரப்பினரும் இக் கோரிக்கையை மேலே உயர்த்துவது உண்டு. அரசியல் வாதிகள், பேரின வாதிகள் மட்டுமன்றி பௌத்த மதகுருமார் சிலரும் அவர்களில் அடங்குவர்.

இதுவரை பத்திரிகைகளில் செய்திகளாக, ஆசிரியருக்குக் கடிதங்களாக வெளிவந்து அமுங்கிப் போன இந்தக் கோரிக்கை, நாடாளுமன்றத்தில் பிரேரணையாக வந்து அரசாங்கத்தைச் சோதனை செய்யும் கட்டமான பரீட்சையாக இருக்கப் போகிறது.

அனேகமாக வேற்று நாடு ஒன்றுடன் போர் புரியும் நாடுகளிலேயே எல்லாக்கட்சிகளும் அங்கம் வகிக்கும் யுத்த சபைகள் நிறுவப்படுவது வழக்கம். அடுத்த நாட்டு மக்கள் அறிந்தாலும் பரவாயில்லை; அவர்களை அழித்தொழித்தேனும் தங்கள் நாடு போரில் வென்று விடவேண்டும் என்ற உத்வேகத்துடன், பிரதான யுத்த சபையின் பல உத்திகளை வகுக்கும்; அவற்றைச் செயற்படுத்தும்; எதிர்நாட்டுக்கு உண்டாகும் அழிவுகளைத் தனது வெற்றியாகக் கொள்ளும்.

ஆகவே உத்தேச பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டு யுத்த சபை இங்கும் இயங்குமானால் போரில் வென்ற வேண்டும் என்ற இலக்குடன் வடக்கு—கிழக்கு வாழ் தமிழர்கள் மேலும் அழிக்கப்படுவர்; தமிழர் பிரதேசம் மேலும் சிதைத்து நொறுக்கப்படும்; என்பது நிச்சயம்.

யுத்த சபைக் கோரிக்கை எனத்தும் பெருந்தீ எழுவதற்கு அரசின் போரினூடு சமாதானம் என்ற அர்த்தமற்ற போக்கும் செயற்பாடுமே காரணங்கள்.

தமிழர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான சமாதான வழியிலேயே தீர்வு காண்பதற்கு மக்களிடம் ஆணை பெற்றுப் பதவிக்கு வந்த அரசு, தன்னிச்சையாக போரை முதன்மைப் படுத்தியது.

சமாதானத் தீர்வு, சமாதானம் ஆகியவற்றில் அசையாத, உண்மையான ஈடுபாடு அரசுக்கு இருந்திருக்குமாயின் பதவிக்கு வந்த ஒரு வருடகாலத்திலேயே தீர்வைக் கொண்டு வந்திருக்கலாம். அதற்கு மாறாக, பொறுமை இழந்து போர் வானவேடிக்கையில் ஏற்ற காலத்தை விழுங்கியதே இன்றைய நிலைக்குக் காரணம்.

வினை விதைத்து அரசே. அந்த வினை இப்போது அதனையே சூழ்ந்துள்ளது. இது வேண்டுமென்றே விதைக்கப்பட்ட வினையா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்க முடியாது.

# அர்ச்சனையின் அந்தரங்கம் என்ன?

செயல்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று: காமிய கர்மம் மற்றது: நிஷ்காமிய கர்மம். இவை வடமொழிச் சொற்கள். காமிய கர்மம் பயனை விரும்பிச் செய்வது. நிஷ்காமிய கர்மம் பிரதி பயனை எதிர்பாராமல் செய்வது.

சமூக சேவை, அரசியல் போன்ற உலகியல் துறைகளிலும், உறவு, நட்பு போன்ற வாழ்வியல் துறைகளிலும் மேற் கூறப்பட்டுள்ள இரண்டு வகையான செயல் முறைகளும் கடைப் பிடிக்கப்படுவது நாம் அறிந்த சங்கதி.

இறை பக்தியிலும் இரண்டு வகை உண்டு அவை காமிய பக்தி, நிஷ்காமியபக்தி என்பன.

தேங்காய், வாழை பழம், வெற்றிலை, பாக்கு மற்றும் வேறு கனி வர்க்கங்கள், கற்பூரம் ஆகியவற்றைத் தாம்பாளத்தில் வைத்து அர்ச்சகரிடம் கொடுத்ததும்-பெயர் நட்சத்திரம் கேட்பார். சொன்னதும்— ''இஷ்டகாம்யார்த்த சாதுர்ய பவ ஸித்தியர்த்தம்'' என்று ஆரம்பித்து பெயர் நட்சத்திரத்தையும் சேர்த்து, வழிபடு தெய்வத்தின் நாமங்களைச் சொல்லி அர்ச்சித்த பின்னர், கற்பூர தீப ஆராதனை செய்து, கண்ணில் ஒற்றிக் கும்பிடத் தக்கது விபூதி பிரசாதத்துடன், நிவேதனப் பொருள்களையும் தந்துவிடுவார்.

இந்தச் செய்கையின் தாற்பரியம் என்ன?

''அர்ச்சனை செய்விப்பவரின் இஷ்ட (விருப்பிய) காமிய (விரும்பும் பொருள்) கைகூடுவதாக'' என்று, அவருடைய சார்பில் வேண்டுதல் செய்கிறார். அர்ச்சகர் இது காமிய

## ஞானக் கதிர்

பக்தி. காமிய பக்தியினால் இயற்றப்படுவது காமிய கர்மம்.

அபிஷேக ஆராதனை, அன்னதானம், திருவிழாக்கள் போன்ற ஏனைய பலவும் ஏதோ ஒரு வகையில் காமிய கர்மங்களே. காமிய கர்மங்கள் அனைத்துமே ஆன்ம விசாரம் கொண்டோரை விழிப்படையச் செய்யும் சக்தி உள்ளவை. இந்த உண்மையை உணர்ந்தவர்கள் நம்முட் சிலரே.

உதாரணமாக, நாம் செய்யும் தேங்காய், பழ அர்ச்சனையை எடுத்துக் கொள்ளுவோம். இதில் ஆன்மாவைப் பற்றிப் பிடித்திருக்கும் மூன்று மலங்களையும் படிப்படியாக நீக்குமாறு அறிவுறுத்தும் ஒரு நெறி மிகவும் நுட்பமாகப் புகுத்தப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து செய்விக்கப்படும் அர்ச்சனை மட்டுமே ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவும்.

அர்ச்சனைக்காக கோயிலுக்குக் கொண்டு செல்லப்படும் தேங்காயில் ஒரு தனித் தத்துவம் மறைந்துள்ளது. தேங்காயிலிருந்து உரித்து எறியப்படும் மட்டை ''மாயா மலம்.'' மட்டையின் கீழ் உள்ள நார் ''கன்ம மலம்.'' மாயா மலமும் கன்ம மலமும் நீங்கிய தேங்காயை வழிபடு தெய்வத்தின் முன்பு உடைத்துப் பிளந்த பின் தெரியும் கரிய ஓடு ''ஆணவ மலம்.''

மாயாமலமும், கன்ம மலமும் அழிந்து ஒழிந்த பின்னர் ஆணவம் வலிமை குன்றி ஒடுங்கும் போது ''சித்த சத்தி'' தோன்றுகிறது. தேங்காயின் உள்ளே தெரியும் வெண்பருப்பு ''சித்த சத்தி'' எனப்படும் உயர்ந்த நிலைக்கு உவமானமாகக் கொள்ளத் தக்கது.

''பிறவிப் பிணியிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்கு மலங்களின் வலிமையைக் குன்றச் செய்து சுத்த சத்துவ சித்தத்தை அருள்புரிய வேண்டுகிறேன்'' என்று இறைவனை இரந்து நிற்பது தான் அர்ச்சனையின் அந்தரங்கம்.

கோயிலைச் சுத்தம் செய்தல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், பூசைக்கு பத்திர புட்பம் கொய்து கொடுத்தல், மாலை தொடுத்தல், போன்றவை சரியை வழிபாட்டின் அங்கங்களாகும். இந்தத் தொண்டுகள் யாவும் ஆன்ம ஈடேற்றத்திற்கு வித்திடும் முயற்சிகளே. அர்ச்சனையும் முத்திக்கும் வித்திடும் ஆரம்ப கர்மமே.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபுரம் செல்வார்கள் என்பது மணிவாசகப் பெருமானுடைய திருவாக்கு; செய்வது அறிந்து செய்பவர்களுக்கும் அவருடைய வாக்குப் பொருத்தமாக அமையும் அல்லவா?

-மூளாய் அருணாசலம்

# ஹாட்லிக் கல்லூரி திருத்த வேலை பூர்த்தி

ஜேர்மன் தொண்டு நிறுவனமான ஜீ.ரீ.இசற் நிறுவனத்தால், வடமராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளின் கட்டட வேலைகளில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கட்டட வேலை பூர்த்தியடைந்துள்ளது. தொடர்ந்து இக்கட்டடத்திற்கு கூரை அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஜீ.ரீ.இசற் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

கூரை வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பிலுள்ள தலைமையக நிர்வாக உத்தியோகத்தர், கட்டட நிபுணர் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளனர்.

இக் கலந்துரையாடலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபரும், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

இதே வேளை வடமராட்சிப் பகுதியில் அடிக்கல் நடப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்க மிஷன், கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் ஆகிய இரு பாடசாலைகளிலும் தற்பொழுது கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-109)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, பெப். 20

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இளைப்பாறிய அதிபர் சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம் ''வாராதிருக்க வழக்குண்டோ'' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்விற்கான அறிமுக வுரையை கரணவாய் லிங்கம் பந்தல் அமைப்பாளர் சி. நாகலிங்கம் நிகழ்த்துவார். (ஐ-30-173)

★ ★ ★

யாழ். சத்திரத்துச் சந்திக்கு அண்மையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் புனருத்தாரணம் செய்வதற்காகப் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-30)

★ ★ ★

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ-5)

★ ★ ★

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய கும்பாபிஷேக பூர்த்தி நாளான இன்று வெள்ளிக்கிழமை புதிதாக அமைக்கப்பட்ட சகடை வாகன வெள்ளோட்டமும், சங்காபிஷேகமும் காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

பருத்தித்துறை, கொட்டடி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் (பெரிய பிள்ளையார்) கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை மகாசிவராத்திரி நன்னாளிலும், மறுநாள் 26 ஆம் திகதி வியாழக்கிழமை அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவம் சிவப்பிரம்ம ஸ்ரீ ராம்- கெங்காதரக்குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. (ஐ-30)

## நாளை

மாசி 9

சனிக்கிழமை

திதி: நவமி

நட்சத்திரம்: கேட்டை பிற்பகல் 1.16 வரை.

சுபநேரம்: 3.31-5.01

ராகுகாலம்: 9.31-11.01

(பஞ்சாங்கம் வாக்கிய ...)

# ஆதீனத்தில் யோகாசன வகுப்பு


யாழ்ப்பாணம், பெப்.20

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் காலை 6 மணி முதல் 7 மணி வரையும், மாலை 5 மணிமுதல் 6 மணி வரையும் யோகாசன வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆண், பெண் இருபாலாரும் இதில் பங்கு பற்றிவருகின்றனர். (ஐ)

# இருவர் உயிரைக் காப்பாற்றிய யாழ். மக்களின் பரோபகாரம்

மகிழ்ச்சியான செய்தி இது ஆம்; மற்றவர் நலனில் அக்கறையுள்ள, அதன் பொருட்டுத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்த கர்ம சிந்தையுள்ளவர்களுக்கு ஆத்ம திருப்தி தரும் செய்தியுமாகும்.

யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ மாற்ற முடியாத இருதய நோயினால் பாதிக்கப்பட்டு, உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த மூன்று வயதுக் குழந்தை க. விமல்ராஜ், அவரது தாயார் யோகேஸ்வரி கனகலிங்கம் ஆகிய இருவரும் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் பின்னர் சுகமே கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.



இவர்கள் இருவரின் நிலைமையையும், குடும்பப்பின்னணியையும் அறிந்த மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் இவர்களுக்கு உதவும் பொருட்டு நிதிஒன்றைத் திரட்ட முடிவு செய்தனர். அந்தத் தகவலை ''உதயன்'' மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

கடந்த வருடம் ஜூலை ஆறாம் திகதி வெளியாகிய 'உதயன்' அந்தத் தகவலை, லயன்ஸ் கழகத்தினரின் இலக்கை மக்களுக்குச் சொன்னான்.

குடாநாட்டு மக்கள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், பரோபகாரிகள் என்று பல தரப்பாரும் மனித நேயத்துடன் இதற்கெனத் தொடங்கப்பட்ட ''உயிர்காப்பு சேவைத் திட்ட'' விசேட நிதிக்குத் தாராளமாக உதவினார்கள்.

செல்வன் விமல்ராஜும் அவரது தாயாரும் லயன் எஸ். சிறிகந்தராஜாவினால் இந்தியாவுக்கு— சென்னைக்கு — அழைத்துச் செல்லப்பட்டனர்.

சென்னையில் உள்ள விஜயா மருத்துவ மனையில் யோகேஸ்வரி கனகலிங்கத்துக்கு இவ்வருடம் ஜனவரி 12 ஆம் திகதியும், செல்வன் விமல்ராஜுக்கு ஜனவரி 27 ஆம் திகதியும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் எம். விஜயகுமாரினால் சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டன.

தாயும் பிள்ளையும் இம்மாதம் ஏழாம் திகதி சுகமே கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் இருவரினதும் உயிரைக் காப்பாற்ற நிதி உதவி வழங்கியவர்கள் தமது தர்மத்தின் மூலம் யாழ்ப்பாணத்தின் கருணையும், கொடையும் இன்னும் உயிர் வாழ்கின்றன என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நெருந்த காலத்திலும் அறம் செய்யும் தமிழர் பண்பு மேலும் வளரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

எமது சங்கத்தின் உறுப்பினரும்
கல்விப் பிரிவின் தலைவருமாகிய

## செல்வன் ம. காண்டீபன்

1997 க. பொ. த. (உ/த) பரீட்சையில் நான்கு பாடங்களிலும் "A" சித்தி பெற்றமையையிட்டு அவர் மேன்மேலும் கல்வியில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

உறுப்பினர்கள்,
இணுவில் கிழக்கு
(53497) கிராம அபிவிருத்திச் சங்கம்.



# உளமார வாழ்த்துகின்றோம்

1997 A/L பரீட்சையில் யாழ். மாவட்டத்திலேயே இந்து நாகரிகத்தில் அதிகூடிய பெறுபேறுகளை (14A, 20B) நாம் பெறுவதற்கு காரணமான எம் பேராசான் ஆறு-திருமுருகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்கந்தாவின்,
கலை மைந்தர்கள்.

(49963)



# செல்வம்ஸ்

நீண்டகால பாவனைக்கு லூக்காஸ் (LUCAS) பற்றறிகளை வாங்குவீர். வாகனங்கள், மோட்டோர் சைக்கிள்கள், T. V. பாவனைக்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட பற்றறிகளையும், தரமான அசிட்டையும் நம்பிக்கை நியாயமான விலையில் வாங்க!

## செல்வம்ஸ்

343, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
220 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(53499)



# புலமைப் பரிசில் - 1998

15ஆவது பயிற்சிப் பரீட்சை
(யாழ். மாவட்டம்)

அதிகூடிய புள்ளி பெற்றோர்

செல்வன் குலதாஸ் டில்ஷான் 169 புள்ளி
(உடுவில் மகளிர் கல்லூரி)
செல்வன் கணேசலிங்கம் நிஷாந்த் 167 புள்ளி
செல்வன் திருநாவுக்கரசு பிரசாந்த் 166 புள்ளி
(யாழ். இந்துக் கல்லூரி)
செல்வி கதிரவேலு பூர்ணிமா 164 புள்ளி
(யாழ். சன்மார்க்க வித்தியாலயம்)
செல்வன் சிவரட்ணம் சுலக்ஷன் 163புள்ளி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

பரிசுபெறும் சுட்டெண்கள்:
100, 243, 1, 159, 175.

அடுத்த பரீட்சை: 22 - 02 - 1998

BOND யாழ். நகர்.

(53494)



# வாழ்த்துகின்றோம்

## அருணோதயக்கல்லூரி
அளவெட்டி.

1997 A/L இல் சிறந்த பெறுபேறுபெற்ற பின்வரும் மாணவர்களையும் ஏனைய மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும், அதிபரையும் வாழ்த்துகின்றோம்.

| | | மாவட்ட நிலை |
|---|---|---|
| ப. சர்மிளா | 2A2B | 6 |
| இ. அசோக் | 2ABC | 71 |
| இ. நீரஜா | 2ABC | 23 |

பரீட்சையில் தோற்றியோரில் 90 வீதமானவர்களே பல்கலைக்கழகத்திற்கு தகுதியானவர்கள்.

பெறுபேற்று வீகிதம்

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | 100% | அளவையியல் | 100% |
| இந்துநாகரிகம் | 90% | பொருளாதாரம் | 60% |
| இந்துசமயம் | 92% | கணக்கியல் | 100% |
| | | வர்த்தகம் | 75% |
| சங்கீதம் | 100% | புள்ளிவிவரவியல் | 100% |
| நாடகவியல் | 100% | கிறிஸ்தவம் | 100% |

பாராட்டுபவர்கள்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
அருணோதயக்கல்லூரி,
அளவெட்டி.

[49959]


# தந்தை செல்வா
# நூற்றாண்டு நிகழ்ச்சிகள்
## அகில இலங்கை ரீதியில் நடைபெறவிருக்கும்
## கட்டுரை / கவிதைப் போட்டிகள்

தந்தை செல்வா நூற்றாண்டினை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களிடையேயும், ஏனையோரிடையேயும் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்துவதென "தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத் தேசியசபை" தீர்மானித்துள்ளது.

மேற்படி போட்டிகள் பின்வரும் மூன்று பிரிவினரிடையே நடத்தப்படவுள்ளன.

1. க. பொ. த. (சாதாரண தரம்) வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர் மட்டத்திலான போட்டி.
2. க. பொ. த. (உயர்தரம்) வகுப்பில் கல்விபயிலும் மாணவர்மட்டத்திலான போட்டி
3. எல்லோரும் பங்குபற்றக் கூடியதான திறந்த போட்டி.

**மாணவரிடையே நடைபெறவுள்ள போட்டி விதிகள் பின்வருமாறு:-**

1. ஒவ்வொரு மாணவனும்/ மாணவியும் தன்னுடைய விண்ணப்பத்தை அதிபர் மூலம், தான் மாணவர் என்பதை உறுதிசெய்து அனுப்புதல் வேண்டும்.
2. போட்டிகள் குறிப்பிட்ட ஒரு தினத்தில், குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும்.
3. பங்குபற்றுவோர் தங்களுடைய அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்குரிய ஏதாவது ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கட்டுரை/ கவிதை எழுதுவதற்கு ஒரு மணித்தியாலம் மட்டும் வழங்கப்படும்.
5. கவிதை எந்த வடிவிலும் அமையலாம். மரபுக் கவிதையானால் 40 வரிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதையானால் 80 வரிகளுக்கு மேற்படாமலும் அமையலாம்.

கட்டுரை 350 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

திறந்த போட்டியில் எவரும் பங்குபற்றலாம். இவர்கள் கீழே தரப்பட்ட தலைப்புக்களில் கட்டுரை/ கவிதை எழுதி அனுப்பலாம். ஒருவர் எத்தனை கவிதை அல்லது கட்டுரை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

1. கவிதை புதுக்கவிதையாகவோ அல்லது மரபுக் கவிதையாகவோ அமையலாம்.
2. மரபுக்கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதை 100 வரிகளுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.
3. கட்டுரை 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
4. கவிதை, கட்டுரை என்பன தனித்தனி தாள்களிலும், பெயர், விலாசம் என்பன பிறிதோர் தாளிலும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

பொது:

1. தரமான கட்டுரைகள், கவிதைகள் பிரசுரிக்கப்படும்.
2. தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத்தேசிய சபையின், இப்போட்டிகளை நடத்தும் உபகுழு (கல்வி) வின் தீர்மானமே இறுதியானதாகும்.
3. (அ) மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இறுதி நாள் 15-03-98 ஆகும்.
   (ஆ) ஏனையோர் (திறந்த போட்டிக்கு) கட்டுரை, கவிதை அனுப்புவதற்கு இறுதிநாள் 30-03-98 ஆகும்.
4. (அ) யாழ். மாவட்டப் போட்டியாளர்களாயின், மாணவர்கள் விண்ணப்பங்களையும், ஏனையோர் கவிதை, கட்டுரைகளையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

செயலாளர்,
**தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக்கல்விக்குழு**
440, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,

   (ஆ) ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த போட்டியாளர்களாயின், மாணவர்கள் விண்ணப்பங்களையும், ஏனையோர் கவிதை, கட்டுரைகளையும் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

செயலாளர்,
**தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக் கல்விக் குழு,**
146/19, ஹவ்லொக் வீதி, கொழும்பு - 5
[Havelock Road, ColOmbo - 5]

### 5 (அ) கவிதைப் போட்டிக்கான தலைப்புக்கள்:

1) தந்தை செல்வா பிறந்திலரேல்......
2) தந்தை காட்டிய வழியினிலே......
3) எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே......
4) அண்ணல் காந்தியின் வழியில் தந்தை செல்வா......
5) வாழ்க எம் செல்வா வாழ்க அவர் கொள்கை......

### (ஆ) கட்டுரைப் போட்டிக்கான தலைப்புக்கள்:

1) தீர்க்கதரிசி தந்தை செல்வா
2) தந்தை செல்வாவின் அரசியல் அடிச்சுவடுகள்.
3) மக்கள் விடுதலைக்குத் தந்தை செல்வா காட்டிய வழி.
4) இலங்கை அரசியலில் தந்தை செல்வாவின் பங்கு
5) சமகால அரசியல் தலைவர்களுடன் தந்தை செல்வா - ஒரு ஒப்புநோக்கு

பரிசுகள்:

1) க. பொ. த. (சா. த.) வகுப்பு வரை:- தெரிவு செய்யப்படும் முதல் மூவருக்கு ரூ. 20,000- பெறுமதிமிக்க தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும்.
2) க. பொ. த. (உயர்தரம்) வகுப்பு:- முதல் மூவருக்கு ரூ. 30,000- பெறுமதிமிக்க தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும்.
3) ஏனைய (திறந்த) போட்டியாளர்கள்:- முதல் மூவருக்கு ரூ. 50,000- பெறுமதி மிக்க தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும்.
4) யாழ்ப்பாணம், வன்னி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் இவை தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் கொழும்பு உட்பட ஒரு மாவட்டமாகக் கருதப்பட்டு, மாவட்ட மட்டத்திலும் முதல் மூவருக்கும் தகுந்த பரிசுகள் வழங்கப்படும்.

தந்தை செல்வா தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், ஆவணங்கள் வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மாவை சோ. சேனாதிராசா,**
இணைச் செயலாளர்,
தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத்
தேசிய சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## ஆசார்யாபிஷேக அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் மாசி மாதம் 11ஆம் நாள் திங்கட்கிழமை (23-2-98) சித்தயோகமும், மீனலக்கினமும் கூடிய காலை 10.32 முதல் 11.13 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் திருவருளை முன்னிட்டு

எமது ஜேஷ்ட புத்திரன்
**சிரஞ்ஜீவி கிருபாகரசர்மா**
(கண்ணன்)
அவர்களுக்கு

வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ள சமய, விசேட நிர்வாண ஆசார்யாபிஷேக வைபவத்தில் தாங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சோ. இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்
பி. சுகந்தி தம்பதிகள்
(வண்ணை சிவன் தேவஸ்தானம்)
16, கஸ்தூரியார் லேன்,
யாழ்ப்பாணம். (53502)



## யா/ விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்

## க.பொ.த. (உ/த) 1997

மேற்படி பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பின்வரும் மாணவர்களுக்கும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த

**பாராட்டுக்களைத்**
தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | | மாவட்ட நிலை |
|---|---|---|
| இ. பங்கயற்செல்வி | 4A | 09 |
| சி. சிவநாதன் | A 3B | 68 |
| தி. உமாசுதன் | 2A B C | 73 |
| கு. யசோதா | A 3B | 86 |
| இ. வாகீசன் | A B C S | 106 |
| வ. இராஜகுகன் | A 2B C | 128 |
| தி. திருச்செல்வி | B 2C S | 131 |
| ச. அரவிந்தன் | B 3C | 147 |
| தி. கணேஸ்வரி | 2B 2C | 171 |
| சி. சிறீஸ்கந்தன் | 3B C | 181 |
| நா. சி. கவிதா | A B 2C | 190 |
| த. மாலசுதன் | 3B C | 194 |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(53503)



## ஈசன் கல்வி நிலையம்
கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

**மீட்டல் வகுப்புகள்**
விலங்கியல்
திரு. கெங்காதரன்

ஆரம்பம்: 27-02-98 வெள்ளி 2-45 p m

★ விலங்கியல் வாராந்தப் பரீட்சை நடைபெறும். இப்பரீட்சையில் தோற்ற விரும்புபவர்கள் முற் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

முதலாவது பரீட்சை: 26-02-98 (வியாழன்) 1-00 p m.
(53508)



யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர்
**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை**
அவர்கள் அகில இலங்கை சமாதான
நீதிவானாக நியமனம் பெற்றதை

## வாழ்த்துகின்றோம்

கேடில் விழச் செல்வம் தந்த ஞானி
சடிலாக் கல்வியை ஈந்த மேதை
மாடு நிலா வெறிக்கு மதி தீர்க்க தரிசி
மாண்புடை நீதிகார் சமாதான தூதர்
பீடுடைப் பெருங் கீர்த்தி பல்கலைக் கீந்த
பேராசான் பொன் பாலசுந்தரன் வாழி
நுண்கலைகள் அனைத்துமே நும்முயிராக
எண் கலைகள் அறுபத்து நான்கும் தந்து
இங்கணையவர் உள்ளக் கோயில் வைகி
வண் பொருது வேந்தாய் வாழி வாழி

**கவின்கலை மன்றம்**
**இராமநாதன் நுண்கலைக் கழகம்**
மருதனார்மடம், யாழ். பல்கலைக்கழகம்
(53509)



## Admission of Public Officers for Degree Programme to follow B. Sc Agriculture

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture of the University of Jaffna for Admission of Public Officers for Degree Programme to follow B.Sc Agriculture as internal students for the Academic Year 1997/98. The applicants should have the following qualifications:-

1. At least passes in 3 subjects in the G.C.E. (A/L) Examination, at one sitting in one of the following subjects:-
   (a) Botany,
   (b) Zoology,
   (c) Chemistry,
   (d) Physice,
   (e) Agriculture

   or

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   and

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognised institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level technical grade officer in the field of Agriculture after obtaining Diploma Course.
4. Age: Candidate should be less than 45 years of age at the time of closing date for applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Exams & Admission Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna by sending a self addressed stamped envelope (for Rs. 2/50). Applications should reach his office on or before 28.02.1998.

Please note that session for these students will commence on 09.03.1998.

In case of employed Candidates, Application should be forwarded through the relevant Heads of Department. Selected Candidates will be called to sit for a written test and an Oral Examination.

No applications will be entertained after the closing date of applications.

- Registrar
(C/2922)


# புலிகளின் பிரச்சினை வேறு தமிழரின் பிரச்சினை வேறு

## கருணாநிதி கூறுகிறார்

லண்டன், பெப். 20

இலங்கைத் தமிழர் உரிமைகளையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பாமல் தமிழர்களின் பிரச்சினைகளை தனியாக எடுத்து அவர்களுக்குரிய உரிமைகளை வழங்க இலங்கை அரசு முன்வரவேண்டும்.

தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு. கருணாநிதி மேற்கண்டவாறு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவோ, தமிழகமோ ராஜிக மட்டத்தில் தலையிட முடியாத நிலை தற்போது இந்தியாவில் உள்ளது. இந்தியாவில் ஏற்படுகின்ற பெரிய பெரிய நெருக்கடிகள் காரணமாக இது தொடர்பாக ஆழ்ந்து சிந்திக்க நேரம் இல்லாமல் போய்விட்டது. சந்தர்ப்பமும் இல்லாமல் போய்விட்டது. ஒருநேரம் கிடைக்குமானால் அது தொடர்பாக நிச்சயம் பிரதமருடன் பேசுவேன்.

பத்மநாபாவையும் மற்றும் 13 பேரையும் விடுதலைப் புலிகள் கொலை செய்த பின்னர் அவர்கள் மீது இருந்த பற்று, பாசம் எல்லாம் போய்விட்டது. அதற்காக அவர்கள் என்ன மாதிரி என்னைத் தண்டித்தாலும் நான் கவலைப்படமாட்டேன்.

பத்மநாபாவின் கொலையின் பின்னர் தி.மு.க. விடுதலைப் புலிகளுக்கு எந்த ஆதரவும் தரவில்லை. எனது ஆதரவு கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டேன்.

ஆனால் அதன் பின்னர் ஜெயலலிதா விடுதலைப் புலிகள் ஏதோ பிழை செய்துவிட்டார்கள். இப்போது நல்லபடியாக உள்ளார்கள் என்று பிரசாரம் செய்தார்.

இப்படி கருணாநிதி கூறினார். (இ-3-9)


## வாழ்த்துகின்றோம்

கண்ணெனக் கடமையை மதித்து உன்னத சேவையினை வழங்கி பச்சிலைப்பள்ளி மக்களின் பாராட்டுகள் பெற்ற உத்தம சேவையாளன்

**டாக்டர் ச. அம்பிகைபாலன்** அவர்களின்

அரும்பணி சிறந்துவிளங்க மனம்திறந்து வாழ்த்துகின்றோம்.

தென்மராட்சி கிழக்கு
கொடிகாமம் பகுதி மக்கள்.
(சி/2924)



## மானிப்பாய் கோயில்பற்று லயன்ஸ் கழகம்

## உயிர்காப்பு சேவைத் திட்டம்

எமது கழகத்தினால் கடந்த வருடம் ஆடிமாதம்
ஆரம்பித்து வைக்கப்பட்ட
**குழந்தை விமல்ராஜ்**
மற்றும் அவருடைய தாயார்
**யோகேஸ்வரி கனகலிங்கம்**

ஆகியோருடைய இருதய சத்திர சிகிச்சை சென்னை விஜயா மருத்துவமனையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு தாயும் பிள்ளையும் சுகமே கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர். இச்செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவேற எமக்கு நிதியுதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இச்செயற்றிட்டம் சம்பந்தமாக நிதிகள் சேகரிக்கப்பட்டு இதுவரை எமக்கு அனுப்பப்படாமல் இருந்தால், தயவுசெய்து 28-2-98 சனிக்கிழமைக்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கும் படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| லயன், | லயன். |
| செ. கேசவராஜன் | செ. ஞானராஜா |
| செயற்றிட்ட தலைவர் | தலைவர் 97/98, |
| கல்லூரி ஒழுங்கை, | "சிறீரங்கம்" |
| வட்டுக்கோட்டை. | சுதுமலை வடக்கு, |
| | மானிப்பாய். |

(சி-2906)



## புலமைப் பரிசில் - 1998

மாதிரிப் பரீட்சை 13இல் அதி
கூடிய புள்ளி பெற்ற மாணவர்கள்

★ கதிரவேல் பூர்ணிமா — 161 புள்ளி
★ நவரத்தினம் நவராஜகுமரன் — 155 புள்ளி
★ மன்மதராசன் விமல்ராஜ் — 154 புள்ளி
★ சிவராஜசுந்தரம் கஸ்தூரி — 148 புள்ளி
★ ஜெயக்குமார் சிவானுஜா — 146 புள்ளி

அடுத்த பரீட்சை 14 வது 22 - 02 - 98 (ஞாயிறு)

## நாவலர் கல்வி நிலையம்
நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(53518)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நீண்ட காலமாக அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள கா. தவராசாவுக்கு பாடசாலை சமூகம் அளிக்கும் சேவைநலன் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

பாடசாலைக்கு அருகில் உள்ள கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் விழாநாயகர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் படுவார். (இ-3)

# தீவக கடலில் கைதானோரில் 56பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்!

## தமக்கு நேர்ந்த பயங்கர அனுபவம் குறித்து விவரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

புங்குடுதீவு – நயினாதீவுக் கடற் பகுதியில் வைத்துக் கடந்த 17 ஆம் திகதி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் 56 பேர் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை யாழ். மாவட்ட நீதிமன்ற நீதவான் எஸ். பாலச்சந்திரன் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் அனுமதி பெறாமல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான சட்ட திட்டங்களை மீறி இந்தியா செல்ல முயன்றதாக ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் குற்றம் சாட்டப்பட்டு இந்த 56 பேரும் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்கியிருந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் மனிதநேய அடிப்படையில் சட்டத்தரணிகள் பொன் பூலோகசிங்கம், எஸ். பரமராஜா, கா. மு. ராதாகிருஷ்ணன் ஆகியோர் வாதாடினார்கள்.

"இலங்கைக் கடல் எல்லைக்குள் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இலங்கைப் பிரஜைகள் எவரும் இலங்கைக் கடல் எல்லைக்குள் பயணம் செய்யலாம். இதற்கு சட்டத்தில் தடை இல்லை. ஆகவே இவர்கள் குற்றம் செய்யவில்லை; நிரபராதிகள்" என்று கூறி இவர்களை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான் 56 பேரையும் விடுதலை செய்தார்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படையினரிடம் தாம் சிக்கியது எவ்வாறு என்பது குறித்து உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

வன்னியில் நிலைமை மோசமாகி வருகிறது. எனவே அங்கிருக்க முடியாத நிலையில் புதுக்குடியிருப்பு, மாங்குளம் உட்பட வன்னிப் பகுதியின் பல இடங்களிலும் இருந்து வந்த நாம் கடந்த 16 ஆம் திகதி மாலை 5-30 மணியளவில் ஆளுக்கு 8 ஆயிரம் ரூபா வீதம் செலுத்திப் படகில் எமது பயணத்தை ஆரம்பித்தோம்.

பெண்கள், குழந்தைகள் உட்பட 10 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேர் இவ்வாறு பயணத்தை தொடர்ந்தோம். சுமார் 7 மணித்தியால பயணத்தின் பின் நள்ளிரவில் கடலின் நடுவே சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களை எம்மை நோக்கி பொழிந்தபடி 5 டோறாப்படகுகள் வந்தன.

எமது படகினைச் சுற்றி சில மணி நேரம் நெருப்பு மழை பொழிந்தது போல இருந்தது. படகில் இருந்த எல்லோரும் கூச்சலிட்டவாறு கைகளை உயர்த்தியபடி நாங்கள் அகதிகள் என்று கத்தினோம்.

எம்மை அப்பாவிகள் என இனம்கண்டு கொண்ட கடற்படையினர் கைது செய்து தம்மோடு அழைத்துச்சென்று காரைநகர் கடற்படை முகாமில் ஒப்படைத்தனர்.

காரைநகரில் கடற்படையினராலும், இராணுவத்தினராலும் நாம் துருவித் துருவி விசாரிக்கப்பட்டோம். எம்மோடு வந்த இளைஞர் ஒருவர் தடுத்துவைக்கப்பட்டார்.

கடற்படை முகாமில் இருந்த போது கடற்படையினர் எம்மை நன்றாக உபசரித்தனர்.

இப்படி அவர் கூறினார்

அதே சமயம் நேற்று விடுதலை செய்யப்பட்ட 56 பேரில் பலர்வெளியே சென்று தங்க முடியாத நிலையில் நேற்று மாலை வரை யாழ். மாவட்ட நீதிமன்ற வளவிலே தங்கியிருந்தனர்.

இவர்களில் பலர் வன்னி மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்டிருந்தமையால் யாழ்ப்பாணத்தில் எங்கு போய் தங்குவது என்று தெரியாமல் இருந்தனர்.

பயணப்பொதிகளுடன் சிறுவர்கள் குழந்தைகள், பெண்கள் என பலர் நீதி மன்ற வளவில் தங்கி நின்றதை காணக் கூடியதாக இருந்தது. (இ-5)

## தமிழ்க் கட்சிகளை இன்று பீரிஸ் சந்திக்கிறார்

கொழும்பு, பெப். 20

நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளை சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ், புளொட் ஆகிய கட்சிகள் இச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளன.

★ இருவார காலத்துக்குள் வெளியிடப்பட்டுள்ள அரசமைப்பு சீர்திருத்தம் இடைக்கால ஏற்பாடுகள்.

★ வடக்கு — கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது.

போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது. (இ-21)

## 61 இலங்கைத் தமிழர்களை ருமேனியா நாடு கடத்தியது!

கொழும்பு, பெப். 20

உரிய ஆவணங்கள் இன்றி சட்ட விரோதமாகக் குடியேறிய 61 இலங்கைத் தமிழர்களை ருமேனியா நேற்று நாடு கடத்தியது.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் ஒன்றின் மூலம் புக்காரெஸ்ட் நகரிலிருந்து இவர்கள் அனைவரும் நேற்று இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான முழுப் பொறுப்பையும் ருமேனிய அரசு ஏற்றிருந்தது.

வெளிநாட்டவர்களுக்கு விஸா வழங்கும் திட்டத்தினை அண்மையில் ருமேனியா கடுமைப்படுத்தி இருந்தது. வீஸா வழங்குவதை கட்டுப்படுத்தும் 85 நாடுகளை ருமேனியா சமீபத்தில் அறிவித்திருந்தது.

இவற்றில் பெரும்பாலானவை ஆபிரிக்க நாடுகள் ஆகும். (இ-7)

## குடாநாட்டுக்குப் பொருள்கள் ஏற்றும்பணி மீண்டும் ஆரம்பம்

யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களில் பொருள்கள் ஏற்றும் பணி மீண்டும் நேற்று ஆரம்பமானது.

கொழும்பு துறைமுகப் பாதுகாப்பை கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்துக்கு பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் காலித்துறைமுகத்தில் வைத்தே இனிப் பொருள் ஏற்றும் பணியை மேற்கொள்ளவேண்டும் என முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த முடிவைத் தொடர்ந்து கடந்த இரு வாரமாக கப்பலில் பொருள் ஏற்றும் பணி நிறுத்தப்பட்டிருந்தது.

இது விடயமாக ஈ.பி.டி.பி. அமைப்பின் தூதுக்குழு ஒன்று நேற்று கப்பற்றுறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்புடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தில் வைத்துப் பொருள் ஏற்ற அனுமதிக்கப் பட்டுள்ளது. (இ-3)

## விவேகானந்தர் நூற்றாண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப் 20

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்த நூற்றாண்டு நினைவு நிகழ்வுகளை நிறைவு செய்யும் வகையில் —

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நாளை சனிக்கிழமை வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் விசேட மலர் ஒன்றை வெளியிடுகிறது.

சுவாமி விவேகானந்தா நூற்றாண்டு நினைவு மண்டபத்தில் நாளை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொறுப்பாளர் சுவாமி ஜீவனானந்தஜி தலைமை வகிப்பார்.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

விழாவில் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் பொறுப்பாளர் சுவாமி ஆத்மகணாநந்தஜி சிறப்புரை ஆற்றுவார்.

நாட்டிய மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (அ)

## தேர்தலுக்..

(முதலாம் பக்கத் தொடர்)

வதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். இராமேஸ்வரன் அமைச்சரிடம் நேற்று தெரிவித்தார்.

அதற்குபதில் அளிக்கையிலேயே அமைச்சர் இந்த உறுதிமொழியைவழங்கினார்.

யாழ். மாவட்டத்துக்கு புதிதாக 50 பஸ்களை வழங்க வேண்டும் என்று இராமேஸ்வரன் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இன்று அமைச்சருடன்மீண்டும் இராமேஸ்வரன் பேச்சு நடத்தவிருக்கிறார். (இ-8)

## 73 ஆயிரத்து..

(முதலாம பக்கத் தொடர்)

லும் அதி விசேட சித்தியான 4ஏ பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 9 ஆயிரத்து 828 பேர் நான்கு பாடங்களிலும் சித்தி பெறத் தவறி விட்டனர்.

நான்கு பாடங்களிலும் அதிவிசேஷ சித்தி பெற்றவர்களில் கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த 22 மாணவர்களும், ஆனந்தாக் கல்லூரியைச் சேர்ந்த 15 மாணவர்களும், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 6 மாணவர்களும் உள்ளடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-7]

## தலவாக்...

(முதலாம் பக்கத் தொடர்)

யோகம் முற்றாகத் தடைப் பட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்பால் சுமார் 5 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

இரண்டாவது குண்டு வெவ்வேவத்த தோட்டத்தில் விந்துல என்னும் இடத்தில் அமைந்துள்ள எரிபொருள் சேமிப்பு தாங்கியில் வெடித்தது இதனால் தாங்கி பெரும் சேதமடைந்ததுடன் 300 லீற்றர் டீஸல் வெளியேறிவிட்டது.

அந்த தாங்கிக்கு அருகில் அமைந்துள்ள ஆயிரத்து 200 லீற்றர் கொள்வனவுடைய தாங்கியின் கீழ் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடிக்க முன்பே மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்புகள் காரணமாக தலவாக்கொல்லை நகரமே அதிர்ந்ததாகவும் — மக்கள் பெரும் பதற்றம் அடைந்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பையடுத்து இராணுவம் அப்பகுதிக்கு விரைந்து தேடுதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (இ-3-9-7-21)

## வடக்கை..

(முதலாம் பக்கத் தொடர்)

கப்படுத்துவதாகக் கூறிய அஷ்ரப் வடக்கு — கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு தற்போது எதிர்ப்புத் தெரிவிக்கும் ஐ. தே. கட்சியினர் அப்பொழுது ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்த மாகாணங்களை இணைத்தபோது வாய்மூடி மௌனிகளாக இருந்தது ஏன்? என்று கேட்டார்.

அஷ்ரப்பின் இந்தப்பேச்சை சபையில் இருந்த ஐ. தே. க. உறுப்பினர்கள் எதிர்த்தனர். இதனை அடுத்து குழப்ப நிலை ஏற்பட்டது. சபை 10 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் சபை கூடியபோது ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம். அஸ்வர் எழுந்து, தாம் டி. பி. விஜேதுங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்ததாகவும்—

அமைச்சர் அஷ்ரப் சபையில் தெரிவித்த தகவல் முழுப் பொய் என அவர் கூறியதாகவும்— குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இன்று அஷ்ரப் கூறியதை வெளியில் கூறமுடியுமா? என்று அஸ்வர் சவால் விட்டார்.

இதைத் தொடர்ந்து அஷ்ரப் பேசுகையில், வடக்கு— கிழக்கு பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதே இன்றைய தேவை அதற்காக அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும் என்றுகூறினார். (இ-3)

## போலந்துக்குள்..

(முதலாம் பக்கத் தொடர்)

யும் இரு மணித்தியாலங்களின் பின்னர் ஏனைய 96 பேரையும் கண்டு பிடித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் மட்டுமே கடவுச்சீட்டு வைத்திருந்தனர். உக்ரெயின் நாட்டு எல்லைப் பகுதியில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் இந்தக் குழுவே மிகப் பெரியது எனவும் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத குடியேறிகளுக்கு உதவி செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் ஒரு பெண்ணும் பொலீஸாரால் கைது செய்டப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக போலந்துக்குள் நுழைவோரின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்து வந்துள்ளது.

பாதுகாப்பில் காணப்படும் தளர்ச்சி காரணமாகவும், மக்களை சட்ட விரோதமாகக் கொண்டு செல்லும் பன்நாட்டுக் குழுவின் செயற்பாடுகள் காரணமாகவும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. மேற்கு ஐரோப்பியாவுக்குச் செல்லும் வழியாக போலந்தின் கிழக்கு எல்லையை இப்படியானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். (இ-7)

## இடைக்கால..

(முதலாம் பக்கத் தொடர்)

அரசமைப்பு திருத்த யோசனைகள் அமுலுக்கு வந்ததும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு விடும்

ஐ. தே. க. சமர்பித்துள்ள மாற்று யோசனைகள் பூரணமானவையல்ல. காணி உரிமை, பொலீஸ் அதிகாரங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து அவர்கள் தமது யோசனைகளை இன்னும் சமர்பிக்கவில்லை.

இப்படி அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-3)

## பூசகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்ததையடுத்து அவர்கள் இருவரும் தமது பெற்றோருடன் நேற்றுக்காலை அந்த இராணுவ முகாமிற்குச் சென்றபோது படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். அத்துடன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதற்கான உறுதிப்பத்திரத்தையும் படையினர் அவர்களின் பெற்றோரிடம் வழங்கினர்.

புங்குடுதீவு சிவன் கோயில் பூசகர் சிறினிவாச ஐயர் அருணோதய சர்மா (21 வயது), [illegible] பிள்ளைகளின் [illegible] (27 வயது) ஆகியோரே படையினரால் தடுத்து வைக்கப்பட்டவர்களாவர். (இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org